தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

26.11.2012 P.M

27.11.2012 A.M

## மேட்டூரில் 10 நாள்களுக்கு மட்டுமே நீர் இருப்பு : சம்பா , தாளடிக்கும் ஆபத்து



காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி நெல் பயிர்களுக்கு ஜனவரி மாதம் வரையிலும் தண்ணீர் தேவைப்படும் நிலையில், மேட்டூர் அணையில் இருந்து மேலும் 10 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கக் கூடிய சூழல் உள்ளது. இதனால், சம்பா, தாளடி நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். ஆனால், கர்நாடகத்தில் இருந்து போதுமான அளவு தண்ணீர் கிடைக்காததால், 3 மாதம் தாமதமாக கடந்த செப்டம்பர் 17ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. பருவ மழையை எதிர்நோக்கியும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் வழங்க வேண்டிய தண்ணீரைக் கணக்கில் கொண்டும் மேட்டூர் அணையைத் திறக்க தமிழக அரசு முடிவு செய்தது.

தாமதமாக அணை திறக்கப்பட்டதால் ஜூன், ஜூலை மாதங்களில் நடவு செய்யப்படும் குறுவை நெல் சாகுபடி வெகுவாகப் பாதித்தது. கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் சாகுபடி செய்த சில விவசாயிகள் குறுவையைத் தொடர்ந்து தாளடி நெல்லைப் பயிரிட்டுள்ளனர். குறுவையால்

ஏற்பட்ட இழப்பை மறந்து சம்பா நெல் சாகுபடி மூலம் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள முயன்ற லட்சக்கணக்கான டெல்டா விவசாயிகள், முழுவீச்சில் பாடுபட்டு வருகின்றனர்.

சம்பா நெல் பயிர்கள் நடவு முடிந்து பல இடங்களில் ஏறத்தாழ ஒரு மாதமே ஆகியுள்ளது. முன் கூட்டியே பயிரிட்ட சில இடங்களில் நெல் பயிர்களில் இருந்து கதிர் வெளியே

வரத் தொடங்கியுள்ளது. இந்த விவசாயிகளுக்கு குறைந்தது ஜனவரி 15ஆம் தேதி வரையிலும் தண்ணீர் தேவைப்படுகிறது அல்லது அடுத்த 30 நாள்களுக்கு தண்ணீர் கிடைத்தாலும் ஆழ்துளைக் கிணறுகள், பம்பு செட்டுகள் மூலம் மேலும் தண்ணீர் தேவையை நிறைவு செய்து கொள்ளக்கூடிய நிலையில் உள்ளனர்.

ஆனால், இவர்களுக்கு பெரும் அதிர்ச்சியூட்டும் விதமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து செப்டம்பர் 17 முதல் விநாடிக்கு சுமார் 12 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. கர்நாடகத்தில் இருந்து நீர்வரத்து ஏதும் இல்லாத நிலையில், தொடர்ந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டதால் நீர்மட்டம் 84 அடியில் இருந்து திங்கள்கிழமை 48 அடியாகக் குறைந்தது.

இந்த நிலையில், நீர்மட்டம் வேகமாகக் குறைவதைக் கருத்தில் கொண்டு தண்ணீர் திறப்பு ஞாயிற்றுக்கிழமை 10 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. அணையில் இப்போது 16.67 டி.எம்.சி. மட்டுமே தண்ணீர் உள்ளது. சராசரியாக நாளொன்றுக்கு ஒரு டி.எம்.சி. வீதம் தண்ணீர் குறைந்து வருகிறது. இதே நிலை நீடித்தால், மேலும் 10 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க முடியும் என்று பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், லட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள சம்பா, தாளடி நெல் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் அபாயம் ஏற்படும். இதன்மூலம், ஏற்கெனவே குறுவையால் பாதிக்கப்பட்டு, இப்போது நம்பிக்கையுடன் சம்பா, தாளடி நெல் பயிரிட்டுள்ள டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது.

கரையோர விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவதால், அணையின் கரையோரப் பகுதிகளை ஒட்டியுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், அதன் நீர்ப்பிடிப்பு பரப்பு தருமபுரி மாவட்டம் வரையிலும் நீண்டுள்ளது. சுமார் 59.25 சதுர மைல் அளவுக்கு (37,750 ஏக்கர்)

அணையின் தண்ணீர் பரவிக் கிடக்கும். அணை முழு கொள்ளளவை எட்டும் நேரத்தில் சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒகேனக்கல் வரையிலும் தண்ணீர் தேங்கி நிற்கும் என்று கூறப்படுகிறது. அப்போது அணையைச் சுற்றிலும் உள்ள கொளத்தூர், கீரைக்காரனூர், கூனாண்டியூர், வத்தல்பட்டி, கொண்டையனூர், நாகமரை, ஏமனூர், பாலாறு, கோட்டையூர், பண்ணவாடி, மூலக்கடை அதன் சுற்றுப் பகுதிகளில் உள்ள பல குக்கிராமங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தில் நீர் சூழ்ந்திருக்கும். பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இந்த நிலத்தில் மோட்டார் பம்பு செட்டுகளை பயன்படுத்தாமல் விவசாயம் செய்து கொள்ள அதிகாரிகள் தடை ஏதும் கூறுவதில்லை. இதனால், அணையின் நீர்மட்டம் குறையும் நேரங்களில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் குறுகிய காலப் பயிர்களாக நிலக்கடலை, சோளம், கால்நடைகளுக்கான தீவனப்புல் உள்ளிட்டவற்றை பயிர் செய்து பயனடைகின்றனர்.

பண்ணவாடி பரிசல் துறையை ஒட்டியுள்ள பகுதிகளில் குறுகிய கால நெல் பயிரிடப்படுகிறது. ஆண்டு முழுவதும் நீரில் அடித்துவரப்பட்ட வண்டல் மண், மீன்களின் கழிவுகளால் வளம் செறிந்திருக்கும் இந்த மண்ணில் செயற்கை உரம் ஏதுமின்றியே பயிர்கள் செழித்து வளருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பண்ணவாடி பரிசல் பகுதியில் நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் கனகா, இந்திராணி கூறியது: மேட்டூர் அணையின் நீர்மட்டம் இப்போது 50 அடிக்கு குறைந்துள்ளதால், அணையின் கரையோரங்களில் வேளாண் பணிகள் தீவிரமடைந்துள்ளன. டிராக்டர் மூலம் உழுது, நடவுப் பணிகளைத் தொடங்கியுள்ளோம். கோடை மழை வருவதற்கு முன்பு அல்லது தென் மேற்குப் பருவமழை தொடங்கும் முன்பு இரண்டு போகம் சாகுபடி செய்துவிடலாம் என்றனர் அவர்கள்.

கர்நாடகம் இன்னும் 126 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிட வேண்டும்

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி, ஆண்டுதோறும் ஜூன் 1ஆம் தேதி முதல் மே 31ஆம் தேதி வரையிலும் 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தமிழகத்துக்கு வழங்க வேண்டும். (ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடி தண்ணீராகும்).

இதன்படி, ஜூன் 1ஆம் தேதி முதல் நவம்பர் 25ஆம் தேதி வரையிலும், தமிழகத்துக்கு 180.35 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால், 54.07 டி.எம்.சி. மட்டுமே வந்துள்ளது. மேலும், 126.28 டி.எம்.சி. வர வேண்டியுள்ளது. இந்த நிலையில், ஜூன் முதல் செப்டம்பர் வரை விடப்பட வேண்டியதில் நிலுவையில் உள்ள 52.80 டி.எம்.சி. தண்ணீரையாவது வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

இதற்கிடையே, காவிரி டெல்டா மாவட்டப் பாசனத்துக்காக மேட்டூரில் இருந்து ஞாயிற்றுக்கிழமை வரையிலும் 59.28 டி.எம்.சி. தண்ணீர் விடப்பட்டுள்ளது. அணை மூடப்படும் நாளான ஜனவரி 28 வரையிலும் மேலும் குறைந்தது 60 டி.எம்.சி. தண்ணீராவது இருந்தால் மட்டுமே பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**நீரின்றி காயும் சம்பா நெற்பயிர் வேதனையில் விவசாயிகள்**



கடலூர் மாவட்டம், காவிரி டெல்டா கடை மடைப் பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுக்காக்களில் 1.50 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிர்கள் நீரின்றி காய்ந்து வருகின்றன.

கடலூர் மாவட்டம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் ஆண்டுதோறும் வெள்ளம், வறட்சி, புயல் என மாறி, மாறி விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் கடும் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

பலர் விவசாயத் தொழிலையே விட்டு விட்டு வெளியேறும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டு போதிய மழை இல்லாததாலும், மேட்டூரிலிருந்து நீர் தாமதமாக திறக்கப்பட்டதாலும் விவசாயிகள் போதிய நீரின்றி சம்பா பயிர் சாகுபடியை தாமதமாக தொடங்கினர்.

தாமதமாக நீர் திறக்கப்பட்டதால் தமிழக அரசு நேரடி நெல் விதைப்பு சாகுபடி திட்டத்தை அறிவித்து, அதற்கு பல்வேறு மானியத்தொகையையும் அறிவித்தது.

இதை நம்பி விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு சாகுபடியில் ஈடுபட்டனர். தற்போது நிலம் புயலால் ஏற்பட்ட கனமழையில் நீரில் மூழ்கி மீண்டும் உயிர்பெற்ற பயிர்கள் தற்போது நீரின்றி காய்ந்து வருகின்றன.

இது குறித்து வீராணம் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் கே.வி.இளங்கீரன் தெரிவித்தது:

வீராணம் ஏரி பாசனத்தை நம்பி 75 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் சம்பா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது வீராணம் ஏரியிலிருந்து பெயரளவுக்கு பாசனத்துக்கு நீர் திறந்துவிடப்பட்டு மூடப்பட்டுவிட்டது.

ஏரியிலிருந்து விநாடிக்கு 74 கனஅடி சென்னைக்கு குடிநீர் மட்டும் அனுப்பப்படுகிறது. ஏரியின் நீர்மட்டம் 42.40 அடிதான் உள்ளது. மொத்தக் கொள்ளளவு 47.50 அடியாகும். ÷எனவே விவசாயிகள் நலன் கருதி சென்னை குடிநீருக்கு நீர் அனுப்புவதை நிறுத்தி இப்பகுதி விவசாயிகளுக்கு சம்பா சாகுபடிக்கு நீர் வழங்க வேண்டும்.

மேலும் நேரடி நெல் விதைப்பு மூலம் பயிரிடப்பட்ட பயிர்களைக் காப்பாற்றுவதற்கு தமிழக அரசு உடனடியாக டெல்டா பகுதி விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரத்தை 12 மணி நேரமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

மும்முனை மின்சாரம் வழங்கப்படாவிடில் டெல்டா மாவட்டங்களில் பல லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிர்கள் நீரின்றி காய்ந்து சேதமடைந்து மிகப்பெரிய அளவில் பொருளாதார இழப்பீடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

எனவே தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் அண்டை மாநிலங்களில் இருந்தாவது, சம்பா பருவத்துக்கான பிப்ரவரி 15-ம் தேதி வரை மும்முனை மின்சாரத்தை உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் கே.வி.இளங்கீரன்.

**காவிரி பிரச்னை : தமிழகத்தை கைவிட்டது உச்ச நீதிமன்றம் : டெல்டா விவசாயிகள் கருத்து**

காவிரி பிரச்னையில் உச்ச நீதிமன்றம் திங்கள்கிழமை தெரிவித்த கருத்துகள் தமிழகத்தை உச்ச நீதிமன்றம் கைவிட்டுவிட்டது என்பதைத்தான் காட்டுகிறது என்று விவசாய சங்கத் தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது: காவிரி நீர் பாசன விவசாயிகள் நலச் சங்க செயல் தலைவர் மகாதானபுரம் வி. ராஜாராம்: காவிரிப் பிரச்னையில் தமிழகத்தின் உரிமை உச்ச நீதிமன்றத்தால் நிலைநாட்டப்படுமென தமிழக விவசாயிகள் பெரிதும் நம்பியிருந்தனர்.

இந்த நிலையில், மீண்டும் இரு மாநில முதல்வர்களும் பேசித் தீர்க்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது தமிழக

விவசாயிகளுக்கு ஏமாற்றம்தான்.

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு, காவிரி கண்காணிப்புக் குழுவின் உத்தரவு ஆகிய எதையுமே கர்நாடகம் மதிக்கவில்லை. தற்போது மீண்டும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்பது சாத்தியமற்றது.

இரு மாநிலங்களும் பேசித் தீர்க்க முடியாமல்தான் காவிரி நடுவர் மன்றமே அமைக்கப்பட்டது. இந்த மன்றம் உத்தரவிட்டும் தீர்க்க முடியாத ஒரு பிரச்னையை உச்ச நீதிமன்றம் தீர்க்க முனையாமல் கைவிட்டது தமிழக விவசாயிகளை பெரும் கவலைக்குள்ளாக்கியுள்ளது என்றார் ராஜாராம்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம் கூறியது: ஏற்கெனவே, பிரதமர் தலைமையில், இரு மாநில முதல்வர்கள் பங்கேற்ற காவிரி ஆணையக் கூட்டம் மற்றும் இரு மாநில அதிகாரிகள் பங்கேற்ற கண்காணிப்புக் குழு கூட்டங்களின் உத்தரவையே கர்நாடகம் அமல்படுத்தவில்லை.

இந்த நிலையில், முதல்வர்கள் கூடி பேச்சுவார்த்தை நடத்துவது பிரச்னைக்குத் தீர்வாக அமையும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு இல்லை என்றார்.

## மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் இலங்கைக்கு இடையில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலை கொண்டிருப்பதால் தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலின் மத்திய கிழக்குப் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியிருந்தது. இது சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவிழந்தது. தொடர்ந்து அதே இடத்தில் நீடித்த இந்த தாழ்வுப் பகுதி, சற்று நகர்ந்து இலங்கைக்கும் தமிழக கடலோரப் பகுதிக்கும் இடையில் நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் சற்று குறைவான மழையே பெய்யும் என்றனர்.

திங்கள்கிழமை பதிவான மழை (காலை 8.30 மணி நிலவரம் - மில்லி மீட்டரில்): பாம்பன், ராமநாதபுரம் - 50, வேதாரண்யம் - 40, ராமேசுவரம் - 30, மன்னார்குடி - 20, பட்டுக்கோட்டை, பேராவூரணி, காரைக்குடி, திருச்செந்தூர், திருவாரூர், திருவண்ணாமலை, ஆரணி - 10.

வானிலை முன்னறிவிப்பு: தென் தமிழக கடலோரப் பகுதிகளில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தின் மற்ற பகுதிகள், புதுச்சேரி ஆகிய பகுதிகளில் பரவலான மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையை பொருத்தவரையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

## முப்பெரும் சவால்களைச் சமாளிப்போமா ?

சில தினங்களுக்கு முன்பு வெளிவந்துள்ள மூன்று பொருளாதாரச் செய்திகள் கவலைக்குரியவை. ஒன்று, செப்டம்பர் மாதத்துக்கான தொழிற்சாலைகள் உற்பத்தியில் கடும் சரிவு; இரண்டு, அக்டோபர் மாதத்தில் எகிறிய பணவீக்கம்; மூன்று, அதிகரித்துவரும் சர்வதேச வர்த்தக இடைவெளி. (வெளி வர்த்தகப் பற்று-வரவில் பாதகமான போக்கு).

இந்த மூன்று வெவ்வேறு செய்திகளும் ஒரே நேரத்தில் வெளிவந்தன என்பது மட்டும் அல்லாமல், இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிதி ஆண்டின் இரண்டாவது 6 மாதங்களில் - அதாவது அக்டோபர் முதல் அடுத்த மார்ச் மாதம் வரையில் - பொருளாதாரம் மேம்படும் என்று நிபுணர்கள் கணித்திருந்தார்கள். அந்த எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது. தொழிற்சாலைகளின் உற்பத்தி வெறும் 0.4 சதவிகிதம் மட்டுமே வளர்ச்சி கண்டுள்ளது. இது மிக சொற்பமான வளர்ச்சி. கடந்த ஆண்டு (2011-இல்) செப்டம்பர் மாதத்தில் இந்த வளர்ச்சி இருந்தது. சுரங்கத்துறை தவிர, நுகர்பொருள்கள் முதல் மூலதன தளவாடங்கள் வரை அனைத்துத் தொழில் பிரிவுகளிலும் உற்பத்தி வெகு சொற்பம்.

இந்த வீழ்ச்சியைக் காரணம் காட்டிதான், எஃப்.ஐ.சி.சி.ஐ. (ஃபிக்கி) உள்ளிட்ட பல தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனங்கள், வங்கிக் கடன் வட்டியைக் குறைத்திட வேண்டும் என்று ரிசர்வ் வங்கியை மன்றாடிக் கேட்டன. வட்டி விகிதம் குறைக்கப்பட்டாலாவது தொழிற்சாலை உற்பத்தி விறுவிறுப்பு அடையக்கூடும் என்பது அவர்களது வாதமாக இருந்தது. இந்த வாதத்துக்கு மத்திய நிதி அமைச்சரின் ஆசிகள் பரிபூரணமாக இருந்தது.

ஆனால் ரிசர்வ் வங்கியின் கண்ணோட்டம் வேறுவிதமாக இருந்தது. ஏற்கெனவே, நுகர் பொருள்களின் விலைகள் சார்ந்த பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையில், வட்டிவிகிதம் குறைக்கப்பட்டால், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்த கதையாகிவிடுமோ என்று அஞ்சிய ரிசர்வ் வங்கி, அந்த கோரிக்கைக்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டது. ரிசர்வ் வங்கியின் எண்ண ஓட்டம் எந்த அளவு சரியாக இருந்துள்ளது என்பதை, பிறகு வெளியான புள்ளிவிவரங்கள் நிரூபித்துள்ளன.

சில்லறை விலைப் பணவீக்கம் அக்டோபர் மாதத்தில் 9.75 சதவீதமாக உயர்ந்தது. இதனையொட்டி விலைவாசி மீண்டும் அதிகரித்துவிட்டது. சமையல் எண்ணெய் விலை 17.92 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

பருப்பு வகைகள் விலை 14.89 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறிகள், இறைச்சி, மீன், முட்டை, சர்க்கரை என அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலையும் 10 சதவீதம் முதல் 12 சதவீதம் வரை அதிகரித்துவிட்டது.

உணவுப்பண்டங்கள் அல்லாத ஆடைகள், காலணிகள் போன்ற பொருள்களின் விலையும் 10 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

தொழிற்சாலை உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டுமானால் ரிசர்வ் வங்கி வட்டியைக் குறைக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

பணவீக்கம் குறைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் வட்டி விகிதம் குறைக்கப்படவில்லை. ரிசர்வ் வங்கியின் முந்தைய முடிவு சரி என்பதை நடுநிலையாளர்கள் உணர்கிறார்கள்.

இது ஒருபுறம் இருக்க, மூன்றாவது சவால் சர்வதேச வர்த்தகத்தில், அளவுக்கு அதிகமாக துண்டு விழுந்திருப்பதுதான். முன் எப்போதும் இல்லாத அளவுக்குத் துண்டு விழுந்திருக்கிறது. கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும் இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பைவிட, இறக்குமதி மதிப்பு 21 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரித்துள்ளது.

÷நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் அக்டோபர் 2012 வரையிலான 7 மாதங்களில், சர்வதேச வர்த்தகத்தில் விழுந்துள்ள துண்டு மதிப்பு 110 பில்லியன் டாலர் ஆகும். இதே போக்கு நீடித்தால், இந்த நிதி ஆண்டு இறுதியில் இடைவெளி 200 பில்லியன் டாலரைத் தொட்டுவிடக் கூடும். இது முன் எப்போதையும்விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

÷இதற்குக் காரணம் என்ன என்பதை தேடிச் செல்லத் தேவை இல்லை. வழக்கமாக இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியப் பொருள்களுக்கு அடுத்தபடியாக, இந்தியாவில் தங்க இறக்குமதி அதிகரித்துள்ளது.

÷அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக, நமது ஏற்றுமதி சரிந்துள்ளது. பாரம்பரியமாக நமது ஏற்றுமதியில் பெரும்பகுதி அந்த நாடுகளுக்குத்தான் போய் கொண்டு இருந்தது. இப்போது ஆப்பிரிக்கா மற்றும் லத்தின் அமெரிக்க நாடுகளைப்

போன்ற புதிய சந்தைகளை நமது ஏற்றுமதியாளர்கள் நாடிச் செல்கின்றனர். இதில் முழு வெற்றிபெற கால அவகாசம் தேவை.

÷ஏற்றுமதியைப் பொருத்தவரை, இன்னொரு பின்னடைவும் ஏற்பட்டுள்ளது. பொதுவாக, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்தால், அது ஏற்றுமதியாளர்களுக்குக் கூடுதல் லாபம் ஈட்டித் தரும். ஆனால், நடப்பு ஆண்டில் ஏற்றுமதியாளர்களுக்கு அந்தப் பலன் கிடைக்கவில்லை.

÷இறக்குமதி என்னவோ அதிகரித்துக் கொண்டே போகிறது. பெட்ரோலியப் பொருள் பயன்பாட்டை நம்மால் குறைத்திட முடியாது. ஆனால், திடீரென்று தங்கத்தின் ஏற்றுமதி அபரிமிதமாக அதிகரித்திருப்பதுதான் நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டது. தங்கத்தின் விலை எட்டுகால் பாய்ச்சலில் அதிகரித்திருக்கும் அதே நேரம், தங்கத்தின் இறக்குமதி பதினாறு அடி பாய்ந்துள்ளது என்பதுதான் வினோதம்!

÷தங்கத்தின் விற்பனையை மட்டுப்படுத்துவதற்காக, மத்திய அரசும் பாரத ரிசர்வ் வங்கியும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

÷உதாரணத்துக்கு, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் நகைக் கடன் வழங்குகையில், தங்கத்தின் மதிப்பில் 60 சதவிகிதத்துக்கு மிகாமல் மட்டுமே கடன் கொடுக்கலாம் என சில மாதங்களுக்கு முன் ரிசர்வ் வங்கி ஆணை பிறப்பித்துள்ளது.

÷அண்மையில் ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் கே.சி. சக்ரவர்த்தி ஒரு கருத்தை வெளியிட்டார். அதாவது, ""மக்களுக்கு தங்கத்தின் மீதான மோகம் குறைந்து, இந்திய தங்க இறக்குமதியைக் குறைக்க வேண்டும். அது நம் பொருளாதாரம் மேம்பட உதவும்...'' என்றார். தங்கத்தில் போடும் பணம், பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படாமல் முடக்கப்படுகிறது என்பதே அவர் பேச்சின் உட்கருத்து.

÷இந்நிலையில், ரிசர்வ் வங்கி நவம்பர் 19}ஆம் தேதி வெளியிட்ட அரசாணையின் மூலம், தங்கத்தை நகையாகவோ, காசுகளாகவோ, தங்க பிஸ்கட்களாகவோ வாங்குவதற்கு வங்கிகள் கடன் கொடுக்கக் கூடாது என்று தடை விதித்துள்ளது. அதேபோல், தங்க வியாபாரிகளுக்கு, அவசியமான அளவுக்கு மட்டும் செயல் மூலதனக் கடன் கொடுக்கலாமே தவிர, அவர்களிடம், கையிருப்பில் உள்ள தங்கத்தின் மீது கடன் வழங்கக் கூடாது என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தங்கத்தில் ஊக பேரம் நடக்காமல் தடுப்பதும், தங்க இறக்குமதியை இயன்ற அளவு குறைப்பதுமே, ரிசர்வ் வங்கியின் புதிய விதிமுறைகளின் நோக்கம் என்பது தெளிவு.

÷சென்ற நிதி ஆண்டில் (2011-2012) இந்தியாவில் தங்க இறக்குமதியின் மதிப்பு 60 பில்லியன் டாலர் ஆகும். அதாவது 3 லட்சம் கோடி ரூபாய்.

÷இதுபோன்ற விதிமுறைகளால் தங்க இறக்குமதியைச் சிறிதளவு குறைக்க முடியுமே தவிர, பெரிய அளவில் குறையும் என்று எதிர்பார்க்க முடியாது. காரணம், மக்கள் தங்கள் குடும்ப கெü்ரவத்துக்காகவும், ஆபரண ஆசைக்காகவும், அவசரத் தேவைகளுக்கான பாதுகாப்பு அரணாகவும் தங்கத்தைப் பார்க்கிறார்கள்.

÷முக்கியமாக, நடுத்தர மக்களையும், சாதாரண மக்களையும் சேமிக்கத் தூண்டுவதே தங்கம் தான். எனவே, அவர்களைக் கவரக்கூடிய, தங்கத்துக்கு இணையான, அதே சமயம் எளிதான முதலீட்டுச் சாதனங்களை உருவாக்கினால் ஒழிய மக்களின் தங்க மோகத்தை குறைத்திட முடியாது. குறுகிய காலத்தில் பெரிய மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. அதற்கு நீண்டகால அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசு மற்றும் ரிசர்வ் வங்கி தவிர, முதலீட்டு நிறுவனங்களும் இத் திசையில் முனைப்பு காட்ட வேண்டும்.

÷இந்தியா எப்போதுமே ஏற்றுமதி செய்வதைவிட இறக்குமதி செய்வதுதான் அதிகம் என்பது வரலாறு. தற்போதைய பதற்றத்துக்குக் காரணம் இரண்டு. ஒன்று எப்போதையும் விட கூடுதலாக துண்டு விழுந்துள்ளது. இரண்டாவது தங்க இறக்குமதி அதிகமாகவும், வளர்ச்சிக்கு உதவக்கூடிய கனரக மூலதன தளவாடங்களின் இறக்குமதி குறைந்தும் உள்ளது. இது தற்போது ஏற்பட்டுவரும் மந்த நிலைக்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

÷இந்நிலையில் பொருளாதார மந்த நிலை வலுவடையாமல் தடுப்பதற்கும், நிதிப் பற்றாக்குறை மற்றும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் கடும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் உடனடியாக வளர்ச்சிக்கு உதவும் என மத்திய அரசு மனப்பால் குடிக்கக் கூடாது.

÷அரசு நிர்வாகச் செலவுகள், வெளிநாடுகளுக்கு அரசுமுறைப் பயணங்கள் உள்ளிட்ட செலவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் வழங்கியுள்ள பரிந்துரைகள் மேலும் தாமதமின்றி செயல்படுத்தப்பட வேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுமதியாளர்களுக்கு, வங்கிக் கடன் வட்டியில், சலுகை காட்ட வேண்டும்.

உணவு, உரம், சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கான மானியத் தொகை பயனாளிகளுக்கு முழுமையாகக் கிடைக்கும் வகையில், இடையே நேரும் கசிவை அடைத்திட வேண்டும். பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் பணமாக வழங்கும் திட்டம் விரைந்து பரவலாக்கப்பட வேண்டும்.

÷ஊழல் புகார்கள் மேலோங்கியுள்ள இக்கால கட்டத்தில், அதிகார வர்க்கத்தினர் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவதும், தாமதிப்பதும் தகாது. இந்த நிலை சரி செய்யப்பட வேண்டும்.

÷ஆக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான அனைத்துப் பிரச்னைகளுக்கும் ரிசர்வ் வங்கியின் கடன் கொள்கை மட்டுமே தீர்வு ஆகாது. மத்திய அரசு தன் பங்குக்குச் செய்ய வேண்டியதைச் செய்தே தீர வேண்டும். செய்யுமா மத்திய அரசு?

## ***மீளாத் துயரில் கிராமங்கள்***

பசுமையான வயல்வெளிகள், நீர் நிலைகள், தூய்மையான காற்று, கள்ளங் கபடமற்ற வெள்ளந்தியான மனிதர்கள்...!

ஆஹா..! உண்மையான சொர்க்கம் கிராமங்களில்தான் இருக்கிறது எனப் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நிலைமை வேறாக இருக்கிறது என்கிறார்கள் அங்கிருந்து நகரங்களைத் தேடி வருபவர்கள்.

விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்காததால், லாபமில்லாத தொழிலாகிவிட்ட விவசாயம். ஆண்டாண்டுகளாக நீடித்துக் கொண்டிருக்கும் ஆண்டான் அடிமை மனோபாவத்தால், அடங்க மறுக்கும் சாதிய வெறியாட்டங்கள்.

சமுதாய சிந்தனையே இல்லாமல் வளரும் இளைய தலைமுறையினரிடையே பெருகி வரும் போதைப் பழக்கம். உள்ளாட்சி அதிகாரப் பரவலில் களையப்படாத குறைபாடுகளால் நிலவிவரும் குழப்பம்.

இப்படி நாலாபுறத் தாக்குதலால் கிராமங்கள் நிலைகுலைந்து போயுள்ளன என்றால் அது மிகையல்ல. பிறந்த மண்ணை விட்டுச்செல்ல மனமின்றி, பிழைக்க வழியும் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் மிச்சமிருக்கிற மனிதர்களையும், வெளியேற்றாமல் ஓய மாட்டார்கள் போலிருக்கிறது.

நாட்டில் இருக்கிற பிரச்னை போதாதென்று, புதிது புதிதாகச் சிலைகளை வைக்கத் துடிக்கிறார்கள். விழா எடுக்கிறார்கள். மணிமண்டபம் கட்டுகிறார்கள்.

வருடந்தோறும் வாகனப் புறப்பாடு நடத்தி, ஆறிலிருந்து அறுபதுகள்கூட, தலைகளில் ரிப்பன்களைக் கட்டிக் கொண்டு வழியெங்கும் பேய்க் கூச்சலிட்டபடி, மாற்று சாதியினரை வசை பாடிச் செல்கிறார்கள். பிறகெப்படி மலரும் சமத்துவமும். சாதி பேதமற்ற சமுதாயமும்.

பெயருக்கு வேண்டுமானால் சமத்துவபுரங்களைக் கட்டலாம். சமபந்தி போஜனங்களை நடத்தலாம். சம தர்மம்(?) நிலவும் நாகரீக சமுதாயத்தை நாம் உருவாக்கி விட்டோம் என மேடைகளில் முழங்கலாம்.

ஆனால், ஒவ்வொரு மனிதனின் ரத்தத்திலும் சாதியம் உறைந்து கிடக்கும் வரை, இவை எதுவுமே சாத்தியமில்லை!

பொதுவாக தொடர் வறட்சியோ, குடிநீர்ப் பஞ்சமோ, பிழைக்க வழியில்லாதுபோனாலோ கிராம மக்கள், ஊரைக் காலி செய்துவிட்டு பிழைப்பைத் தேடி வேறிடங்களுக்குச் செல்வது வழக்கம்.

ஆனால், இப்போது அப்படியொரு நிலைமை தென் மாவட்ட கிராமங்களில் ஏற்பட்டு விடுமோ என அஞ்சினால் அது மிகையல்ல.

"வளர்த்து விட்டோம்

செந்நீர் ஊற்றி..

வேர்களோ எட்டாத ஆழத்தில்..!'

என்கிறார் ஒரு கவிஞர்.

யார் வளர்த்தார்கள்..? எனச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒவ்வோர் ஆண்டும் சாதிய விழாக்களின்போது ஏற்படும் வன்முறையாலும், விபத்துகளாலும் குறைந்தது பத்து, இருபது உயிர்களையாவது பலி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இதனால், ஏற்படும் பேரிழப்பும், துயரமும் சம்பந்தப்பட்ட குடும்பத்தாரிடம் மட்டுமே ஆறாத ரணமாக பல ஆண்டுகளுக்கு மிஞ்சியிருக்கும்.

"சொல்லச் சொல்ல கேட்காமல் போனானே..! இப்ப பொணமா வந்திருக்கானே..!" கலவரத்தில் உயிரிழந்த இளைஞனின் தாயாரின் புலம்பல்களை, சாதித் தலைவர்கள் செவிமெடுப்பார்களா எனத் தெரியவில்லை. அவர்களுக்கென்ன கவலை!

இதில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒவ்வொரு தலைவர்களின் சிலைகளைச் சுற்றிலும், குறைந்தபட்சம் பத்து போலீஸôராவது நாள் கணக்கில் நிற்கிறார்கள்.

ஏதேனும் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், மாதக்கணக்கில் சிலைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலைமை.

சாதி மோதல்கள் தொடர்ந்தால், ஆளும் நிர்வாகத்துக்கு ஏற்படும் அவப் பெயரும், இழப்பும் குறைந்த பட்சம் அடுத்த தேர்தல் வரைக்குமாவது நீடிக்குமே. இந்த விவகாரத்தில் வாக்கு வங்கி அரசியலை மனதில்கொண்டு, பெரிய கட்சிகளும் மெபளனம் சாதிப்பது வேதனையானது.

ஒவ்வோர் ஆண்டும் தொடரும், இந்தத் துயரத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

இந்த ஒரு விஷயத்திலாவது, சர்வ கட்சிகளின் ஒத்துழைப்போடு, சட்டத்தைக் கையிலெடுக்க அரசு துணிய வேண்டும்.

இனி தமிழகத்தில் எந்தவொரு சாதியினரும் விழாக்களின் பெயரால் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதை அனுமதிக்க முடியாது என சட்டம் கொண்டு வந்து சாதி விழாக்களுக்குத் தடை விதித்தால் மட்டுமே, சாதிய வன்முறைகளால் ஏற்படும் உயிர்ப் பலிகளையும், அப்பாவிகளின் மண்டை உடைவதையும் தடுக்க முடியும்.

இந்த முடிவை, அமைதியை விரும்பிய அனைத்து சாதி தேசியத் தலைவர்களின் ஆன்மாக்கள் நிச்சயம் வரவேற்றுப் போற்றும்.

26th nov 2012 P.M

**பயிற்சிக்கு செல்லும் விவசாயிகள் : எம்.எல்.ஏ. வழியனுப்பினார்**

விவசாயப் பயிற்சிக்காக கோவைச் செல்லும் விவசாயிகளை நெய்வேலி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பி.எஸ்.சிவசுப்பிரமணியம் வழி அனுப்பி வைத்தார். ÷இந்நிகழ்ச்சி பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது.
÷பண்ருட்டி வட்டார வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் 50 விவசாயிகளை தேர்வு செய்து, விவசாயப் பயிற்சிக்காக கோவைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு உள்ள கரும்பு,

பருத்தி ஆராய்ச்சி நிலையம் மற்றும் மேட்டுப்பாளையத்தில் உள்ள வன ஆராய்ச்சி மையத்தில் தொழில்நுட்பம் குறித்து இரண்டு நாள்கள் நேரடிப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

÷விவசாயப் பயிற்சிக்காக கோவைச் செல்லும் விவசாயக் குழுவினரை நெய்வேலி சட்டப் பேரவை உறுப்பினர் எம்.பி.எஸ்.சிவசுப்பிரமணியன் கொடி அசைத்து தொடங்கி வைத்து வழி அனுப்பி வைத்தார்.

÷நிகழ்ச்சியில் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் மாலதி கமலக்கண்ணன், மாவட்ட கவுன்சிலர் தேவநாதன், அட்மா குழுத் தலைவர் ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.சங்கர், வட்டார தொழில் நுட்ப மேலாளர் எஸ்.பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நிலக்கடலை விதை பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை

நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள், விதையினை பரிசோதனை செய்தால் அதிக மகசூல் பெறலாம் என விதை பரிசோதனை அலுவலர் சி. பெருமாள் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கார்த்திகைப் பட்டத்தில் இறவை நிலக்கடலை சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். நிலக்கடலை சாகுபடியில் அதிக செலவு ஆகும் இடுபொருள் விதை ஆகும். எனவே தரமான விதையாக இருந்தால் தேவையான அளவு பயன்படுத்தி செலவைக் குறைக்கலாம்.

குறைந்தபட்ச முளைப்புத்திறன் 70 சதவீதம் இருந்தால்தான், இப்போது கிடைக்கும் மகசூலை விட 50 சதவீதம் கூடுதலாகப் பெற முடியும். எனவே விவசாயிகள் தங்களிடம் இருப்பில் இருக்கும் நிலக்கடலை விதையில் ஒரு கிலோ அளவுக்கு மாதிரியினை எடுத்து காஞ்சிபுரத்தில் உள்ள விதை பரிசோதனை அலுவலகத்தில் ரூ.30 செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளலாம் எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் பொறியியல் துறை இயந்திரங்கள் வாங்க நிதி ஒதுக்கீடு

விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

இது குறித்து அத்துறையின் செயற்பொறியாளர் கோ. மணி கூறியது:

விழுப்புரம் மாவட்டத்தில் 2012-2013-ம் நிதி ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்களை வாங்குவதற்கு தமிழக அரசு ரூ.39.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, டிராக்டர், பவர் டிரில்லருக்கு அதிகபட்ச மானியமாக ரூ. 45 ஆயிரம், ரோட்டாவேட்டருக்கு அதிகபட்ச மானியமாக ரூ.20 ஆயிரமும் வழங்கப்பட உள்ளது.

மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய மக்களுக்கு தனியே நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்கள் பகுதிகளில் உள்ள உதவிச் செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாழைத்தார்களின் வரத்து குறைவு : விலை உயர்வு**

பரமத்திவேலூர் வாழைத்தார் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் வரத்து குறைந்ததால் வாழைத்தார்களின் விலை உயர்ந்தது.

பரமத்திவேலூர் வட்டம் காவிரி கரையோரப் பகுதிகளில் வாழை, வெற்றிலை, கரும்பு, கோரை உள்ளிட்ட பணப் பயிர்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன.

இங்கு விளையும் வெற்றிலை, வாழை, கோரை ஆகியவை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

கடந்த மாதம் ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வாழைத்தார்கள் அதிக விலைக்கு விற்பனையானது. பண்டிகை காலத்திற்குப் பிறகு பூவன் வாழைத்தார் ரூ.150-க்கும், ரஸ்தாலி ரூ.150-க்கும், பச்சைலாடன் ரூ.100-க்கும், கற்பூரவள்ளி ரூ.150-க்கும் ஏலம் போனது. கார்த்திகை தீபத்திற்குப் பிறகு திருமண நிகழ்ச்சிகள் மற்றும் சுப நிகழ்ச்சிகள் தை மாதம் வரை அதிகம் நடைபெறாது.

கார்த்திகை தீபத் திருநாளுக்கு முன்பாக திருமண நிகழ்ச்சிகள் மற்றும் சுப நிகழ்ச்சிகள் அதிக அளவில் நடைபெறுவதாலும், வரத்து குறைந்துள்ளதாலும் வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் முதல் ரகம் ரூ.300-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.250-க்கும், பச்சைலாடன் வாழைத்தார் ரூ.200-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.220-க்கும் ஏலம் போனது. இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

**நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த விளை நிலங்களில் மலைவேம்பு நடவு செய்ய வலியுறுத்தல்**

மழைப் பொழிவை அதிகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த, நாமக்கல் மாவட்ட விளை நிலங்களில் குறைந்தபட்சம் தலா 50 மலைவேம்பு மரங்கள் நடவு செய்ய வேண்டும் என்று விவசாயிகளை மாவட்ட மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் சனு ஹோட்டல் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, சங்க நிறுவனத் தலைவர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார்.

இதில், நாமக்கல் மாவட்ட நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என 4 வகையாகப் பிரித்து மண்ணுக்கு ஏற்ற மரங்கள் நடவு செய்தால்தான் மாவட்டத்தை பசுமை மாவட்டமாக்க

முடியும் என்று சமூக நல ஆர்வலர் புதுக்கோட்டையைச் சேர்ந்த அங்குராஜ் தெரிவித்தார்.

பெருந்துறை கணேசமூர்த்தி பேசுகையில், மழை வளத்தை பெருக்கக் கூடியதும், வருமானத்தை அதிகளவில் ஈட்டித் தரக்கூடியதுமான மலைவேம்பு மரங்களை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்ய வேண்டும் என்றார் அவர்.

என்.எஸ்.ஆர்.முரளிதரன் பேசுகையில், ஒவ்வொரு ராசிக்கும் ஒரு மரம் இருப்பதை வன சாஸ்திரம் கூறுகிறது. அதன்படி, 108 ராசிக்கும் உள்ள 108 மரங்களை நடவு செய்திட விவசாயிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் 33 சத காடுகள் உருவாக்கும் இலக்கினை எட்டிட விவசாயிகள், மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து மக்கள் இயக்கமாக மாற வேண்டும். தற்போது நாமக்கல் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் 1,250 அடிக்குக் கீழ் சென்றுவிட்டது. இது அபாயகரமான நிலைக்கு எச்சரிக்கை மணியாகும்.

இதற்கு மழை மேகத்தை ஈர்த்து மழைப் பொழிவை அதிகரிக்கக் கூடிய மலைவேம்பு மரங்களை விவசாயிகள் ஒவ்வொருவரும் தங்களது தோட்டத்தில் குறைந்தபட்சம் 50 மரங்களை நடவு செய்திட உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். தவிர, அதிகப்படியான வருவாய் ஈட்டித் தரக்கூடிய சிவப்பு சந்தன மரங்களையும் நடவு செய்ய வேண்டும் என வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கச் செயலர் தில்லைக்குமார் மற்றும் சங்க உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர்.

## கார்த்திகை பட்ட சாகுபடி : தரமான விதைகள் பயன்படுத்த அறிவுறுத்தல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் கார்த்திகை பட்ட பயிர் சாகுபடிக்கு தரமான விதைகள் பயன்படுத்த வேண்டுமென வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜெகதீசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது கார்த்திகை பட்டத்தில் இறவை சாகுபடிக்கு உகந்த சிறு தானிய பயிரான ராகி மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களான நிலக்கடலை, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்களின் தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்.

மேலும், விவசாயிகள் விதைகள் வாங்கும் முன்பு விதை குவியல்களுக்குரிய முளைப்புத் திறன் பகுப்பாய்வு அறிக்கை கேட்டு சரி பார்க்கவும். விதைகளின் தரம் பற்றி அறிந்துகொள்ள, கிருஷ்ணகிரி நகரில் எண்:35, மோகன்ராவ் காலனி, முதல் குறுக்குத் தெருவில் விதைப் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

இந்தப் பரிசோதனை நிலையத்தில் மாவட்டம் முழுவதிலிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணி விதை மாதிரிகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, பரிசோதனை முடிவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகள்,

விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, ஒரு பணி விதை மாதிரி பரிசோதனைக்கு கட்டணமாக ரூ.30 செலுத்தி பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

**அரியலூரில் தானிய உற்பத்தி கருத்தரங்கம்**

அரியலூரில், வேளாண்துறை சார்பில் உணவு தானிய உற்பத்தி குறித்த மாவட்ட அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் அ. கருப்பசாமி திறந்து வைத்து, பார்வையிட்டார்.

கருத்தரங்கில், நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சுப்ரமணியம், திருந்திய நெல் சாகுபடி குறித்து ஓய்வுபெற்ற வேளாண் இணை இயக்குநர் விஜயகுமார், மக்காச்சோளம் சாகுபடி குறித்து பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மைய தலைவர் கவிமணி,

பயறு வகை சாகுபடி தொழில்நுட்பம் குறித்து புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் பயிற்சி நிலைய தலைவர் கீதா, கடலை பயிர் சாகுபடி மற்றும் முந்திரி சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விருத்தாசலம் எண்ணெய் வித்து ஆய்வு மைய தலைவர் வைத்தியநாதன், நிரந்தர நவீன கரும்பு சாகுபடி குறித்து திருச்சி மாவட்டம், சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் பன்னீர்செல்வம், நாட்டுக்கோழி, வெள்ளாடு வளர்ப்பு குறித்து நாமக்கல் கால்நடை அறிவியல் மைய பேராசிரியர் விக்ரம் சக்கரவர்த்தி ஆகியோர் விளக்கி பேசினர்.

கருத்தரங்கில், வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) சேகர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சவுந்தரராஜன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் உமாமகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சாந்தி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் துணை இயக்குநர் இளங்கோவன் வரவேற்றார். ரவி நன்றி கூறினார்.

**விவசாய பயிற்சி முகாம்**

கடவூர் வட்டம் மஞ்சநாயக்கன்பட்டியில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு வேளாண்துறை உதவி இயக்குநர் ஜெயந்தி தலைமை வகித்தார். மாநில திட்ட வேளாண்துறை உதவி இயக்குநர் சுப்பிரமணியன் விவசாயத் திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார்.

எண்ணெய்வித்து பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, தென்னை ஆகிய பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள், விதை நேர்த்தி செய்தல், உயிர் உரமிடுதல், நுண்ணூட்ட

உரமிடுதல், அடி உரமிடுதல், மேல் உரமிடுதல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்படுத்துதல், பயிர் பாதுகாப்பு முறைகள் ஆகியவை குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

உதவி வேளாண் அலுவலர் ரமேஷ், மணிகண்டன், விதை அலுவலர் சிவபெருமாள், ஆத்மா திட்ட அலுவலர்கள் போதும்பொண்ணு, நிர்மலா, சரவணன் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

**நாகை விவசாயி விஷம் குடித்து தற்கொலை**

நாகையை அடுத்த வலிவலம் அருகே விவசாயி விஷம் குடித்து சனிக்கிழமை உயிரிழந்தார்.

வலிவலம் காவல் சரகம், கூரத்தாங்குடி, கீழத்தெருவைச் சேர்ந்தவர் த. ராஜாங்கம் (35). இவர், கூரத்தாங்குடி பகுதியில் தனக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்திலும், 4 ஏக்கர் குத்தகை நிலத்திலும் விவசாயம் செய்திருந்தார். கடன் வாங்கி விவசாயப் பணிகளை மேற்கொண்ட நிலையில், பாசன நீர் கிடைக்காமல் பயிர்கள் காய்ந்து வருவதால் மன உளைச்சலுக்குள்ளாகியிருந்தாராம் ராஜாங்கம்.

இந்த நிலையில், சனிக்கிழமை இரவு ராஜாங்கம் விஷம் குடித்தார். திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிரிழந்தார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

26.11.2012 P.M

27.11.2012 A.M

## பயிர்கள் காப்பீடு :டிச., 15 வரை பதிவு

திண்டுக்கல்:தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில், பல பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு, சம்பா நெற்பயிருக்கான காப்பீட்டு திட்டத்தில் சேர, டிச. 15 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு, மொத்த மதிப்பாக 8 ஆயிரத்து 692 ரூபாய் நிர்ணயிக்கப்படுகிறது. பயிர்க்கடன் பெறாத விவசாயிகள், சிட்டா, அடங்கல் அல்லது வி.ஏ.ஓ., சான்றுடன் முன்மொழிவு படிவத்தை, அவரவர் ÷சமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கியிலேயே செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை, வேளாண்துறை, கூட்டுறவு, வர்த்தக வங்கியில் கேட்டுப் பெற்று தொகை செலுத்தலாம், என, தேசிய வேளாண் காப்பீட்டு திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## காய்கறி பந்தல் அமைக்கரூ .1.50 லட்சம் மானியம்

தேனி:விவசாயிகளுக்கு காய்கறி பந்தல் அமைக்க அரசு 1.50 லட்சம் ரூபாய் மானியம் வழங்குகிறது. தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், பந்தல் காய்கறிகளின் விளைச்சலை பெருக்க அரசு மானியம் வழங்கி வருகிறது. புடலை, அவரை, பாகற்காய் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்யும் விவசாயிகள், ஒரு எக்டேருக்கு பந்தல் அமைத்துக் கொள்ளலாம். விவசாயிகளின் வசதிக்கு ஏற்ப கற்கால்கள் மூலமோ, அல்லது சிமென்ட் கால்கள் அமைத்தோ பந்தல் அமைக்கலாம்.பந்தல் அமைத்த பிறகே தோட்டக்கலைத்துறை 1.50 லட்சம் ரூபாய் மானியம் வழங்குகிறது.மானியத்துடன் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை, பந்தல் அமைக்கலாம். தேவைப்படுவோர் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்.

## நெற்பயிர்கள் கருகும் அபாயம் : விவசாயத்திற்கு வழியில்லை

திருப்புத்தூர்:திருப்புத்தூரில் வழக்கமான மழை பெய்யாததால், சுமார் 6 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.திருப்புத்தூரில் 95 சதவீத விவசாய நிலங்கள் கண்மாய் மூலமே பாசனவசதி பெறுகிறது.அக்டோபரில் பெய்த மழையில் சில கண்மாய்களே பெருகின. 50 சதவீத கண்மாய்களில் 40 சதவீதமும், மீதமுள்ள கண்மாய்களில் ஒரு மாதத்திற்கான தண்ணீரும் உள்ளது. இதனை நம்பி, அக்டோபரில் மட்டும், சுமார் 10ஆயிரம் ஏக்கர் பரப்பில், நெல் விவசாய

பணி துவங்கியது.தொடர்ந்து,நவம்பரில் கூடுதலாக 4 ஆயிரம் ஏக்கரில் நடவுப் பணிகள் நடந்தன.தாமதமான மழையால், வழக்கத்தை விட,40 சதவீத பணிகள் குறைவாகவே, நடந்துள்ளன.நவம்பரில்தலா 8,3,13 மி.மீ., வீதம் 3 நாட்கள் மட்டும் 24 மி.மீ.மழை பெய்துள்ளது.10 ஆண்டு சராசரி நவம்பர் மழை அளவான 250 மி.மீ.ஐ விட 225மி.மீ.குறைவானது. கடந்த ஆண்டில் நவம்பர் வரை 1252 மி.மீ. மழை பெய்திருந்தது. தற்போது, நவம்பரில் நேற்று வரை 722 மி.மீ. மழையே பெய்துள்ளது.மழை பொய்த்ததால், கண்மாய்களில் தண்ணீர் இருப்பு குறைந்து விட்டது. விவசாயிகள் தற்போது கலக்கத்தில் உள்ளனர். வரும் வாரத்தில்,மழை இல்லாவிட்டால் கருகிவிடும் நிலையில் 50 சதவீதப் பயிர்கள் உள்ளன. கண்மாய்கள் பெருக, இப்பகுதியில் மழைபெய்தால் மட்டும் போதாது, மணிமுத்தாறு,விருசுழியாறு,பாலாற்றில் நீர் வரத்தும் அவசியம். அதற்கு திண்டுக்கல்,புதுக்கோட்டை மாவட்டங்களில்மழை பெய்வதும் அவசியமாகும். மேலும், தொடர் மின் வெட்டால், பம்ப் செட் மூலம் தண்ணீர் இறைப்பதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான நெற்பயிர்கள் கருகுவதைத்தவிர்க்க இயலாது என்றே பல விவசாயிகள் கூறுகின்றனர்.

## நெல்லில் இலை கருகல் நோய்

காரைக்குடி:சாக்கோட்டை ஒன்றிய அளவில் மணியாரம்பட்டி, பெத்தானேந்தல், பெரியகோட்டை, பெத்தாச்சி குடியிருப்பு, கருநாவல்குடி, பானான்வயல் பகுதிகளில், நெல் பயிர்களை செட்டிநாடு மானாவாரிஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்கள் பரமசிவம், ஜடா கவிதா, ஈவேரா மற்றும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.நெல் பயிர்களில் இலை சுருட்டுப்புழு, பாக்டீரியல், இலை கருகல் நோய் தாக்குதல் தென்பட்டுள்ளது. இதை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கினர். அதன்படி, பயிர்களுக்கு தழைசத்து இடுவதை தவிர்க்க வேண்டும், தாக்கப்பட்ட இடத்தில் தண்ணீர் செல்வதை தடுக்க வேண்டும். ஹெக்டேருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் டெட்ராசைக்கிளின் கலந்த மருந்து 300 கிராம், காப்பர் ஆக்ஸி குளோரைடு 1.250 கிராம் கலந்து தெளிக்கவும். இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த, பேம் 70 மிலி., ஆனான்க் 200 மிலி, ஹேசோதயான், புரபனோபாஸ் 100 மில்லி என்ற அளவில் தெளிக்கலாம். விபரங்களுக்கு, சாக்கோட்டை வேளாண்மை அலுவலகத்தை அணுகலாம், என சாக்கோட்டை உதவி இயக்குனர் மணிவண்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்

## கிணறுகளில் தண்ணீர் இருந்தும்மின் தடையால் விவசாயம் பாதிப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் மின் தடையால், கிணறுகளில் இருக்கும் தண்ணீரை கூட, விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த மாதம் பரவலாக மழை பெய்தது.இந்த மழையால் கண்மாய்கள் நிரம்பாமல் இருந்தாலும், கிணறுகளில் சிறிதளவு தண்ணீர் காணப்படுகிறது. இந்நிலையில், செண்பகதோப்பு, மம்சாபுரம்,

பிள்ளையார்நத்தம், பூவாணி, மல்லி பகுதிகளில் விவசாயிகள் வெங்காயம், நெல், மக்காசோளம் போன்றவைகளில் நடவு செய்துள்ளனர். தற்போது மழை பெய்யாததா,ல் கிணற்றில் இருக்கும் மின்சாரம் சரிவர கிடைக்காமல் ,தண்ணீர் பாய்ச்ச முடியாமல் திண்டாடுகின்றனர். விவசாயி ராமராஜ் ,"" தினமும் மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வருவாதல், மின் மோட்டார்களை இயக்க முடியாத நிலை உள்ளது. கிணற்றில் தண்ணீர் இருந்தும், விவ சாயத்திற்கு முழுமையாக பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது,"என்கூறினார்.

**மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வினியோகம்**

குன்னூர்:நுண்ணுயிர் பாசன திட்டத்தின் கீழ், தெளிப்பு நீர் பாசன கருவிகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதால், விவசாயிகள் பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி வெளியிட்டுள்ள அறிக்கை:மலைத்தோட்ட காய்கறி விவசாயிகள் நலனுக்காக தோட்டக்கலை துறை சார்பில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கேரட், முட்டைகோஸ், பட்டாணி போன்றவற்றின் விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விதைகள் குன்னூர் மற்றும் கேத்தி பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயனடைய வேண்டும். மேலும் விவரங்களுக்கு குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம் 2231718 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும், நுண்ணுயிர் பாசனத்திட்டத்தின் கீழ் காய்கறி பயிர்களுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் நிலத்துக்குரிய சிட்டா, அடங்கல் வரைபடம், சிறு விவசாயிக்குரிய சான்று ஆகியவற்றுடன் நேரில் வந்து பயனடைய வேண்டும்.

இவ்வாறு சிபிலாமேரி கூறியுள்ளார்.

**விளை நிலங்கள் கட்டடங்களாக மாறினால் வறட்சி வரும்**

ஊட்டி:"நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்களில், விளை நிலங்களில் கட்டடங்கள் கட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்,' என தெரிவிக்கப்பட்டது.மத்திய திட்ட கமிஷன் நிதியுதவிடன், நீர்பிரி முகடு பகுதிகளில் நீர் பிடிப்பு மேலாண்மை குறித்த மூன்று நாள் கருத்தரங்கு ஊட்டியில் துவங்கியது. ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் சார்பில் நடத்தப்படும் இக்கருத்தரங்கில், மைய முதுநிலை விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன் வரவேற்றார்.

மைய தலைவர் டாக்டர் கோலா, தலைமை வகித்து பேசினார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு, ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் மிஸ்ரா பேசுகையில், ""நீலகிரி உட்பட மலைப் பிரதேசங்களில் உள்ள நிலங்கள், மதிப்பிட முடியாத

பகுதிகள் என அழைக்கப்படுகின்றன. விலை மதிக்க முடியாத இத்தகைய நிலங்கள், பாதுகாக்கப்பட வேண்டும். விளை நிலங்கள், வணிக பயன்பாட்டு நிலங்களாக மாற்றப்பட்டு, அதிகளவு கட்டடங்கள் கட்டப்படுகின்றன; இதனால், விவசாயப் பரப்பு குறையும். பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலையில், விவசாய நிலங்கள், வணிக பயன்பாட்டு நிலங்களாக மாறினால் வறட்சி ஏற்படும். எனவே, விவசாய நிலங்களில் கட்டடங்கள் கட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்," என்றார்.

கருத்தரங்கில், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டத்தில் தொடர்புடைய மாநிலங்களின், முதல் நிலை உயர் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர். ஊட்டி மத்திய, மண், நீர் வள பாதுகாப்பு, ஆராய்ச்சி மைய விஞ்ஞானி டாக்டர் ராஜன், நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். விஞ்ஞானி டாக்டர் கண்ணன் நன்றி கூறினார்.

## பருத்தி செடிகள் பாதிக்காமல் இருக்க மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதி விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.தியாகதுருகம் பகுதியில் 8,000 ஏக்கர் பரப்பில் மானாவாரி நிலங்களில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முடியனூர், விருகாவூர், சித்தலூர், பானையங்கால், பொரசக்குறிச்சி, நாகலூர், கண்டாச்சிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஆகஸ்ட் மாதம் பெய்த மழையின்போது பருத்தி பயிரிடப்பட்டது.தொடர்ந்து மழை ஏமாற்றிய போதிலும், அவ்வப்போது பெய்த லேசான மழை ஈரத்தில் செடிகள் நன்கு செழித்து வளர்ந்தது.பூக்களில் இருந்து காய்கள் உருவாகி தற்போது பருத்து வளர்ந்து வருவதால் காய்ப்புழுக்களால் மகசூல் பாதிக்காத வகையில் மருத்து தெளித்து பராமரித்து வருகின்றனர்.பரவலான சீரான மழை பெய்தால் மட்டுமே பருத்தி காய்கள் பருத்து வளர்வதற்கு வாய்ப்பு உள்ளது. காய்கள் வெடித்து பஞ்சு வெளிவரும் பருவத்தில் காலம் கடந்து மழை பெய்தால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்திக்க நேரிடும்.நல்ல மகசூல் பெற போதிய மழையை எதிர்பார்த்து பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் கவலையுடன் காத்திருக்கின்றனர்.

## விவசாய தொழிலாளர்களுக்கு விக்கிரவாண்டியில் பயிற்சி

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டியில் நீர்வள நில வள திட்டத்தின்படி விவசாய தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.விக்கிரவாண்டியில் உள்ள விவசாயி சுரேஷ் என்பவரது நிலத்தில் திருந்திய நெல் சாகுபடியில் நெல் நடவு மற்றும் சாகுபடிமுறைகள் குறித்த செயல்விளக்கம் நடந்தது.விவசாய தொழிலாளர்கள் பங்கேற்ற பயிற்சி முகாமை வேளாண்மை உதவி இயக்குனர் அரிகிருஷ்ணன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். உதவி விதை அலுவலர் அரி ராமச்சந்திரன், வேளாண்மை உதவியாளர்கள் குமார், ராதை, இந்துமதி, சிட்டிபாபு ஆகியோர் விவசாய தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தனர்.விக்கிரவாண்டியை சேர்ந்த விவசாய தொழிலாளர்கள் 50 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

## நைனார்பாளையத்தில் விதை திட்ட பயிற்சி

சின்னசேலம்:சின்னசேலம் அடுத்த நைனார்பாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கான விதை திட்ட பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் கோவிந்தன் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் ஆரோக்கியசாமி வரவேற்றார். தலைவர் ஆறுமுகம், உழவர் மன்ற தலைவர் குப்புசாமி, விதைசான்று அலுவலர் அன்பழகன், துணை வேளாண்மை அலு வலர் பழனிவேல், உதவி விதை அலுவலர் பிரேம்குமார், வேளாண் உதவி அலுவலர்கள் ரஜினிகாந்த், தங்கதுரை, தொழில் நுட்ப அலுவலர் அன்பு ஆகியோர் பேசினர்.வேளாண்மை உதவி அலுவலர் தங்கதுரை நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை :வேளாண்மைத்துறைக்கு உத்தரவு

திண்டுக்கல்:கலெக்டர் வெங்கடாலம் அறிக்கை: திருந்திய நெல்சாகுபடி முறையை பயன்படுத்துவதன் மூலம் ஏக்கருக்கு அரை டன் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. இந்த முறைக்கு ஒரு எக்டேருக்கு ரூபாய் 3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. ஆத்தூர் வட்டாரத்தில் மொத்தமுள்ள ஆயிரம் எக்டர் நெல்பரப்பில் 600 எக்டர் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மழை காலங்களுக்கு ஏற்ற பயிர்சாகுபடியை விவசாயிகளுக்கு எடுத்துரைக்க வேளாண்மை துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,' என்றார்.

## அரிசி அளவு குறைப்பு

வருஷநாடு:வாலிப்பாறை, தும்மக்குண்டு, முருக்கோடை, அம்பேத்கார்நகர்,வருஷநாடு, சிங்கராஜபுரம்,அரசரடி, கடமலைக்குண்டு, கோம்பைத்தொழு, குமணந்தொழு, தங்கம்மாள்புரம்,கோவில்பாறை,உப்புத்துறை உட்பட 47 கிராமங்களில் ரேஷன் கடைகள் உள்ளன. சராசரியாக ஒரு கடையில், ஆயிரம் கார்டுகளுக்கு மேல் விநியோகம்செய்யப்படுகிறது. இப்பகுதியில் ரேஷன் பொருட்களை முழுமையாக மக்கள் வாங்கி பயன்படுத்துகின்றனர். தற்போது அரிசி 10 சதவீதம், மண்ணெண்ணெய் 32 சதவீதம் குறைத்து கொடுப்பதால், அனைத்து ரேஷன் கார்டுதார்களுக்கு சப்ளை செய்ய முடியாமல் விற்பனையாளர்கள் சிரமப்பட்டு வருகின்றனர். இதனால் ரேஷன் கடைகளில், தினந்தோறும் பொதுமக்களுக்கும், ரேஷன் கடை பணியாளர்களுக்கும் தகராறு ஏற்பட்டு வருகிறது.கடமலை-மயிலை ஒன்றியத்தில் மலைக் கிராம மக்களின் நலன் கருதி, மாவட்ட நிர்வாகம் அரிசி,மண்ணெண்ணெய் அளவை குறைக்காமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அவசியம் !ண மூலிகை தாவரங்களை பாதுகாக்க வேண்டியது ... சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாமில் "அட்வைஸ் '

ஊட்டி:"மருத்துவ குணம் நிறைந்த மூலிகை தாவரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; அதுகுறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்,' என

அறிவுறுத்தப்பட்டது.சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில், பள்ளிகளில் செயல்படும், தேசிய பசுமைப் படை பொறுப்பாசிரியர்களுக்கான, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பயிற்சி முகாம், ஊட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்தது.பூங்காவில் மூலிகை தாவரங்கள்:சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வாசு பேசுகையில், ""பள்ளிகள் தோறும், வாய்ப்புள்ள இடங்களில் அந்தந்த பகுதிகளில் உள்ள மண்ணுக்கு ஏற்ற மரங்களை நட்டு, வளர்க்க வேண்டும்," என்றார். ஊட்டி தாவரவியல் பூங்கா தோட்டக்கலை உதவி இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் பேசுகையில், ""ஆர்கிட் போன்ற அழிந்து வரும் பூக்கும் தாவரங்கள் குறித்த விழிப்புணர்வை பெற்று, அத்தகைய பூக்களை பள்ளிகள், வீடுகள், பொது இடங்களில் வளர்க்க வேண்டும். ஊட்டி தாவரவியல் பூங்காவில், மரம், செடி, கொடிகளை மட்டும் பார்த்து ரசிக்காமல், அங்குள்ள 100 ஆண்டு பழமை வாய்ந்த அரிய வகை மரங்கள், மூலிகை செடி, தாவரங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்," என்றார்.

மகத்துவமிக்க மருத்துவ தாவரங்கள்:மத்திய ஓமியோபதி மருத்துவ மூலிகை ஆய்வு சேகரிப்பு கூட தாவரவியல் வல்லுனர் டாக்டர் ராஜன் பேசியதாவது:

மருத்துவ குணமிக்க, நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த பல மூலிகை தாவர, செடியினங்கள் நீலகிரியில் உள்ளன. "மாபியா பிட்டாடா' என்ற தாவரத்தில் இருந்து கேன்சர் தடுப்பு மருந்து தயாரிக்கப்படுகிறது; இத்தாவரம், பைக்காரா பகுதியில் அதிகம் காணப்படுகின்றது. பர்லியார் உட்பட பகுதிகளில் அதிகம் காணப்படும் "கேமமய்' என்ற மலர் செடி, வாசனை திரவிய பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது; இச்செடியில் இருந்து தயாரிக்கப்படும் "டிப்-டீ', கிலோ 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

நீலகிரியில், அதிகம் விளையும் குறுமிளகில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகளவில் உள்ளது. ரத்தத்தை சுத்தம் செய்யும் ஆற்றல், சுக்கு என்ற வாசனை திரவிய பொருளுக்கு உள்ளது. மன அழுத்தத்தை போக்கும் மருந்து தயாரிக்க, மணம் தரும் ரோஸ் மேரி மலர் செடியின் இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. பால் கலக்காத தேநீரில், ரோஸ் மேரி மலர்களின் இரு இலைகளை போட்டு அருந்தினால், நல்ல மணம் கிடைக்கும். ஊட்டி அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் அதிகளவு காணப்படும் "ஜெருசலம் செடி'களில், நோய் எதிர்ப்பு சக்தியை உள்ளடக்கிய அமிலங்கள் உள்ளன. நம் கண்முன் இருக்கும் இத்தகைய மூலிகை தாவரங்கள் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதுகுறித்த விழிப்புணர்வை மாணவ, மாணவியர் மத்தியில் ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும்.இவ்வாறு, டாக்டர் ராஜன் பேசினார்.

ஊட்டி அரசு கலைக்கல்லூரி உதவி பேராசிரியர் டாக்டர் கண்ணன், தேசிய பசுமைப் படை திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லட்சுமி நாராயணன், சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மைய கள அலுவலர் குமாரவடிவேலு பேசினர்.

## மஞ்சள் மூட்டை எடையில் மோசடி : 2 புரோக்கர் கைது

தம்மம்பட்டி: தம்மம்பட்டி அருகே, செந்தாரப்பட்டியை சேர்ந்தவர் நல்லு. மஞ்சள் கமிஷன் புரோக்கரான இவர், செந்தாரப்பட்டியை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து, மஞ்சளை மொத்தமாக கொள்முதல் செய்து, மண்டிகளுக்கு கொடுத்து வருகிறார்.

இந்நிலையில், செந்தாரப்பட்டி விவசாயிகளிடம், 67 கிலோ எடையுள்ள, 40 மூட்டைகளை கொள்முதல் செய்து, கமிஷன் மண்டிக்கு சொந்தமான ஆட்டோவில் ஏற்றி அனுப்பினார். எடை போட்டதில் சந்தேகமடைந்த விவசாயிகள், மஞ்சள் லோடு ஏற்றிச் சென்ற ஆட்டோவை நிறுத்தி, ஆட்டோவில் இருந்த மூட்டைகளை, எடை போட்டனர்.

இதில், ஒவ்வொரு மூட்டையும், 72 கிலோ இருந்தது. அதனால், ஆத்திரமடைந்த விவசாயிகள், நல்லுவிடம் தகராறு செய்தனர்.

மேலும், புரோக்கர் நல்லுவை கண்டித்து, விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். தம்மம்பட்டி போலீஸார், நடவடிக்கை எடுப்பதாக கூறியதை அடுத்து, மறியல் கைவிடப்பட்டது.

இந்நிலையில், கொள்முதலில் மோசடி செய்த புரோக்கர் நல்லு தரப்பு மீது வழக்கு பதிவு செய்யாததால், தம்மம்பட்டி போலீஸ் ஸ்டேஷனை, விவசாயிகள் முற்றுகையிட்டனர்.

அதையடுத்து, புரோக்கர் நல்லு, 55, அவரது மகன் ராஜேந்திரன், 34, ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்த போலீஸார், அவர்களை கைது செய்தனர்.

## தீவனம் , தண்ணீரின்றி ஈமு கோழிகள் சோர்வு : தொடர்ந்து வழங்க கோரிக்கை

ப.வேலூர்: "ஈமு கோழிகளுக்கு தீவனம் வழங்குவது நிறுத்தப்பட்டதால், அவை தண்ணீர், தீவனம் இன்றி சோர்வடைந்து காணப்படுகிறது. அவற்றை காப்பாற்ற, தொடர்ந்து தீவனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது.

ப.வேலூர்-மோகனூர் சாலையில், "கொங்குநாடு ஈமு பண்ணை' துவங்கப்பட்டது. அதன் பங்குதாரர்களாக, தேவராஜ், சத்யராஜ், அறிவழகன், நடராஜன் ஆகியோர் இருந்தனர். பல்வேறு கவர்ச்சி அறிவிப்புகளை நம்பி, 850க்கும் மேற்பட்டோர், பலகோடி ரூபாய் அளவுக்கு, இந்நிறுவனத்தில் முதலீடு செய்தனர்.

இந்நிலையில், திடீரென கொங்குநாடு ஈமு பண்ணை இழுத்து மூடப்பட்டது. அதையறிந்த முதலீட்டாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். அதை தொடர்ந்து, 323 பேர், நாமக்கல் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு போலீஸில் புகார் செய்தனர். போலீஸார் வழக்கு பதிந்து, தலைமறைவான பங்குதாரர்களை தேடி வந்தனர்.

அதில், தேவராஜ், சத்யராஜ் ஆகியோரை கைது செய்தனர். தலைமறைவாக உள்ள அறிவழகன், நடராஜன் ஆகியோரை தீவிரமாக தேடி வருகின்றனர். இதற்கிடையில், பண்ணையில் விட்டுச் சென்ற ஈமு கோழிகள், தீவனம், தண்ணீர் இன்றி இறப்பதை தடுக்க, மாவட்ட நிர்வாகம் சார்பில், 30 மூட்டை தீவனம் வழங்கப்பட்டது.

அதை கொண்டு ஒரு மாதத்துக்கு, ஈமு கோழிகளுக்கு தீவனம் வழங்கப்பட்டு வந்தது.
இந்நிலையில், நான்கு நாட்களுக்கு முன் தீவனம் முடிந்துவிட்டது. அதனால், கோழிகளுக்கு தீவனம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தீவனம் மற்றும் தண்ணீர் வழங்காததால், பண்ணையில் உள்ள ஈமு கோழிகள் சோர்வடைந்து காணப்படுகிறது.
"ஈமு கோழிகளை பாதுகாக்கும் வகையில், தொடர்ந்து தீவனம் அளிக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**செம்மை கரும்பு சாகுபடி திட்டம் முடக்கம் : ஆலை நிர்வாகம் மெத்தனம் : விவசாயிகள் கடும் அதிருப்தி**

நாமக்கல்: "சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் மெத்தனப்போக்கால், செம்மை கரும்பு சாகுபடி திட்டம் முடங்கியுள்ளது. இத்திட்டத்தை முறையாக செயல்படுத்தாத ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தமிழகத்தில், கரும்பு சாகுபடியை மேம்படுத்தும் நோக்கில், செம்மை கரும்பு சாகுபடி திட்டம் என்ற முன்மாதிரி திட்டத்தை, கடந்த ஆண்டு, தமிழக அரசு அறிவித்தது. அதற்காக, 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கரும்பு நாற்றுகள் நிழல் வலைக்கூடத்தில் வளர்த்து, தோட்டத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் நடவு செய்து பராமரிப்பதன் மூலம் அதிக விளைச்சல் பெறமுடியும் என்ற அடிப்படையில், இத்திட்டம் துவங்கப்பட்டது.
தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலை பகுதிகளில், செம்மை கரும்பு திட்டத்தை செயல்படுத்த வழிகாட்டுதல் வழங்கியது. அதை தொடர்ந்து, ஒவ்வொரு சர்க்கரை ஆலைகளிலும், கோட்டம் வாரியாக பயனாளிகள் தேர்வு செய்து, 50:50 என்ற அரசு மற்றும் ஆலை நிர்வாகம் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டது.
பல்வேறு கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள், இத்திட்டத்தை அமல்படுத்தின. எனினும், சரியான முறையில் பயனாளிகளுக்கு மானியம் வழங்காமலும், தரமில்லாத நிழல் வலைக்கூடங்கள், கரணை வெட்டும் இயந்திரங்கள் ஆகியவற்றை பெயரளவில் கொடுத்து, உரிய முறையில் பயிற்சி அளிக்காததால், இத்திட்டம் முழுமையாக வீணடிக்கப்பட்டுள்ளது.
தனியார் ஆலைகளில், அரசின் மானியத்தை மட்டும் பயனாளிகளுக்கு கொடுத்துவிட்டு, ஆலையின் எந்த மானியமும் வழங்கமால், இத்திட்டத்தை முற்றிலும் முடக்கி வைத்துள்ளனர்.
செம்மை கரும்பு சாகுபடி திட்டத்தில், தரமான விதை கரும்புகளை தேர்ந்தெடுத்து, அவற்றில் உள்ள கணு பகுதியில் இருந்து பரு சீவல்கள், கரணை வெட்டும் இயந்திரம் மூலம் வெட்டி எடுத்து, பிளாஸ்டிக் குப்பிகளில் வளர்த்து, 30 நாட்கள் வயதுடைய தரமான நாற்றங்காலை, விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிடப்பட்டது.
ஆனால், தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள், இத்திட்டத்தை சரிவர செயல்படுத்தவில்லை. இதுகுறித்து, பல்வேறு விவசாய சங்கங்கள், அரசுக்கும், வேளாண் துறையினருக்கும் நேரடியாக

புகார் மனு அளித்துள்ளனர்.
நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மோகனூர் சர்க்கரை ஆலையில், இத்திட்டம் பற்றி, பயனாளிகளுக்கு உரிய பயிற்சி அளிக்கவில்லை என்றும், கோட்டம் வாரியாக அமைக்கப்பட்ட நாற்றங்கால்கள், தற்போது முற்றிலும் சிதைந்த நிலையில் காணப்படுவதகாவும், விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.
மேலும், ஆலை நிர்வாகத்தினர், எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்காமல், கரும்பு துறையில் மெத்தனமாக செயல்படுவதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.
கரும்பு சாகுபடியை சீர்த்திருத்த, அரசால் அறிவிக்கப்பட்டுள்ள செம்மை கரும்பு சாகுபடி திட்டத்தை, நிர்வாக குளறுபடி காரணமாக, ஆலை நிர்வாகத்தினர் பாழ்படுத்தி உள்ளனர்.
ஏற்கனவே, மத்திய அரசால் கரும்பு சாகுபடிக்கு செயல்படுத்தப்பட்ட, "சுபாக்ஸ்' என்ற திட்டத்தில், பல்வேறு ஆலைகளில், பயனாளிகளுக்கு மானியத்தை கொடுக்காமல் ஏமாற்றப்பட்டது.
அதேபோல், கரும்புத்துறை மூலம் மத்திய அரசிடம் இருந்து உரிய நிதியை கேட்டு பெறாமல், இத்திட்டம், தமிழகத்தில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
"செம்மை கரும்பு சாகுபடி திட்டத்தை, அரசு சீர்படுத்துவதுடன், இத்திட்டத்தை சரிவர செயல்படுத்தாத ஆலை நிர்வாகிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாய சங்கத்தினர் கோரிக்கை கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்கணும்**

ராசிபுரம்: "கரும்பு டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, மாவட்ட மாநாட்டில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
நாமக்கல் மாவட்ட, தமிழ்நாடு விவசாய சங்கத்தின் (மார்க்சிஸ்ட் கட்சி), மாவட்ட மாநாடு, ராசிபுரத்தில் நடந்தது. சங்க மாவட்டத் தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். மாநாட்டு குழுத் தலைவர் சென்றாயன் வரவேற்றார். தமிழ்நாடு கரும்பு விவசாய சங்க மாநில துணைத் தலைவர் நல்லாகவுண்டர், மாநாட்டை துவக்கி வைத்தார். செயலாளர் முனுசாமி கோரிக்கையை விளக்கிப் பேசினார்.
மாநாட்டில், விவசாயிகளுக்கு தொடர்ந்து நான்கு மணி நேரமாவது, மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ள கரும்பு டன் ஒன்றுக்கு, 2,350 ரூபாய் என்பது, மிகுந்த குறைவான விலை. அதை, 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். தமிழகத்தில், தீவணத்தின் மூலப்பொருட்கள் விலையேற்றம் மற்றும் வறட்சியின் காரணமாக, பால் உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர்.
எனவே, பசும் பாலுக்கு, ஐந்து ரூபாய் உயர்த்தி, லிட்டருக்கு, 25 ரூபாயும், எருமை பாலுக்கு, ஏழு ரூபாய் உயர்த்தி, லிட்டருக்கு, 35 ரூபாயும் தரவேண்டும். ராசிபுரத்தில் சிறப்பாக செயல்பட்டு

வரும் உழவர் சந்தையை இடமாற்றம் செய்ய முயற்சிக்கும், நகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம், முயற்சியை கைவிட வேண்டும்.
மேட்டுர் அணை நிரம்பி வெளியேறும் உபரி நீரை, செந்தமலை ஓரமாக கால்வாய் வெட்டி, திருமணிமுத்தாறு வழியாக திருப்பி விட்டால், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பல்லாயிரகணக்கான விவசாயிகள், நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைய வாய்ப்புள்ளது. போர்க்கால அடிப்படையில், இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.
கொல்லிமலையை மையப்படுத்தி இயங்கி வந்த பழச்சாறு தொழிற்சாலையை மீண்டும் இயக்க வேண்டும். விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்களில் நடக்கும் முறைகேடுகளை தடுத்து, முழு பயனும், விவசாயிகளுக்கு கிடைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.
இந்திய மாணவர் சங்க மாவட்டச் செயலாளர் கண்ணன், சங்க நிர்வாகிகள் சுந்தரமுர்த்தி, ரங்கசாமி, பெருமாள், ராஜேந்திரன், ஆதிநாராயனன், முத்துசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## நவ.,30ல் விவசாயி குறைதீர் கூட்டம்

நாமக்கல்: "நவம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 30ம் தேதி நடக்கிறது' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நவம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 30ம் தேதி, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், காலை, 10.30 மணிக்கு நடக்கிறது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நதான் தலைமை வகிக்கிறார். விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 30 லட்சம் கறிக்கோழி குஞ்சு பொரிப்பு குறைப்பு

பல்லடம்:தமிழகத்தில் கறிக்கோழி தேக்கம் தொடர்வதால், கடந்த 10 நாளில் ரூ.4.50 கோடி மதிப்புள்ள 30 லட்சம் குஞ்சுகள் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது.
தமிழகத்தில், பல்லடம், உடுமலை, பொங்கலூர் உட்பட பல இடங்களில் 60க்கும் மேற்பட்ட கறிக்கோழி குஞ்சுகள் பொரிப்பகங்கள் உள்ளன. பொரிப்பகங்களில் வைக்கப்படும் முட்டைகள், 21 நாட்களில் குஞ்சுகளாக வெளியே வருகின்றன. தமிழகம் முழுவதும், தினமும் சராசரியாக 10 லட்சம் கறிக்கோழி குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
உற்பத்தி செய்யப்பட்ட குஞ்சுகள், பண்ணையில் வளர்க்க வழங்கப்படு கின்றன. ஒரு நாள் குஞ்சு 42 நாட்கள் முதல் 45 நாட்களுக்குள் இரண்டு கிலோ எடை கொண்ட கறிக்கோழியாக வளர்கிறது. இந்த எடை அளவில் உள்ள கோழிகள் பிடிக்கப்பட்டு, தமிழகம் மற்றும் கேரளாவின் பல இடங்களுக்கு விற்க அனுப்பப்படுகின்றன.
கடந்த மாதம் பெங்களூருவில் ஏற்பட்ட பறவைக்காய்ச்சல் பீதி காரணமாக, தமிழகம் மற்றும் கேரளாவில் கறிக்கோழி நுகர்வு கடுமையாக சரிந்தது. பீதி முழுமையாக மறையாததால், தமிழகம்

முழுவதும் இன்னும் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட கறிக்கோழிகள் தேக்கம் அடைந்துள்ளன. தேக்கத்தை குறைப்பதற்கு பி.சி.சி., பண்ணை கொள்முதல் விலையை குறைத்தும், பயன் ஏற்படவில்லை.

தேக்க நிலை சீரடையும் வரை, 30 சதவீத கோழி உற்பத்தி குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, குஞ்சு உற்பத்தி 30 சதவீதம் குறைக்கப்பட்டது. கடந்த 10 நாளில், ரூ.4.50 கோடி மதிப்புள்ள, 30 லட்சம் கறிக்கோழி குஞ்சுகள் பொரிப்பு குறைக்கப்பட்டுள்ளது.

26th nov 2012 P.M

**விவசாயிகள் தரமான விதை உற்பத்தி செய்தால் அதிக வருமானம் பெறலாம்**

திருக்கோவிலூர்:முகையூர் ஒன்றியம் வட கரைத்தாழனூரில் விதை கிராமத் திட்டத்தில் தரமான விதை உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நடந்தது.விவசாயிகளுக்கான பயிற்சி முகாமிற்கு உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர்கள் சரவணன், ஆரோக்கியராஜ் முன்னிலை வகித்தனர். ஊராட்சி தலைவர் சரசுரங்கநாதன் வரவேற்றார்.வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தலைமை தாங்கி பேசியதாவது:உயர் மகசூலுக்கு தரமான வீரிய சான்று விதைகள் பயன்படுத்துவது அவசியம். இதன் மூலம் 30 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்கும்.

வேளாண் துறை மூலம் 17 சதவீத விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. எஞ்சியவை தனியார் துறை மற்றும் விவசாயிகளுக்குள் விதை பரிமாற்றம் செய்யப்படுகிறது. இவை தரமானதா என விவசாயிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்காக மகளிர் சுயஉதவிக் குழுக்கள், முன்னோடி விவசாயிகளுக்கு அரசுத்துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.இதற்காக விதைபண்ணை அமைத்து ஆதார விதைகள் மற்றும் சான்று விதைகள் உற்பத்தி செய்திட தேவையான தொழில் நுட்பங்கள் வழங்கப்படுகிறது.இதில் பிறரக கலவன்களை அகற்றுதல், விதை சுத்திகரிப்பு செய்தல், விதை நேர்த்தி செய்தல், விதை சான்று பணி செய்தல் போன்ற இனங்களில் நாற்றங்கால்முதல் அறுவடை வரை மூன்று கட்டங்களாக பயிற்சி அளிக்கப் படுகிறது.பயிற்சியில் கலந்துகொள்ளும் பண்ணை மகளிர் குழுவினர், விவசாயிகள், தங்களை விதை உற்பத்தியாளர்களாக பதிவு செய்து வருமானத்தை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு அதிகம் உள்ளது.இவ்வாறு இணை இயக் குனர் சேகர் தெரிவித்தார்.ஒன்றிய கவுன்சிலர் தெய்வசிகாமணி, துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், வேளாண்துறை அலுவலர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

**காவிரி டெல்டா கடை மடை பகுதி விவசாயிகளுக்கு நிம்மதியில்லை**




மின்சாரம் இல்லாமல் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தற்போது நீர் நிலைகளில் தண்ணீரும் இருப்பு இல்லாததால் வாய்க்கால் பாசன விவசாயிகள் சம்பா பயிரை காப்பாற்ற முடியுமா என நிம்மதியின்றி தவித்து வருகின்றனர்.காவிரி டெல்டா கடைமடை பகுதியான கடலூர் மாவட்ட விவசாயிகள் இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாமல் தவித்து வந்தனர். ஒவ்வொரு ஆண்டும் மேட்டூரில் ஜூன் 12ல் திறக்கப்படும் தண்ணீர், இந்த ஆண்டு போதிய மழையின்மை காரணத்தால் செப்டம்பர் 17ம் தேதி திறக்கப்பட்டது. தண்ணீர் இல்லாமல் இருந்தாலும் எப்படியும் மழை வரும் என்ற நம்பிக்கையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தாண்டு விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். ஒரு வழியாக தாமதமாக தண்ணீர் வந்து சேர்ந்ததால், அந்த தண்ணீரைக் கொண்டு அடுத்தடுத்த பணிகளை மேற்கொண்டனர்.ஜெனரேட்டர்இந்நிலையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடும் மின் தட்டுப்பாட்டால் காவிரி கடை மடை பகுதிகளில் உள்ள மோட்டார் மூலம் பாசனம் செய்யும் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகினர். இதனால் பல இடங்களில் பயிர்கள் காய்ந்து கருகி வந்தது. இதனால் மனம் வெதும்பிய விவசாயிகள், நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என பயிரைக் காக்க ஜெனரேட்டர் மூலம் தண்ணீர் பாய்ச்சி வந்தனர்.

நிம்மதி போச்சு

தற்போது மேட்டூரில் தண்ணீர் வற்றிய காரணத்தால் பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் இன்னும் 10 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்ற நிலையில் விவசாயிகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். தொடர்ந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததால் விவசாயிகள் நிம்மதியின்றி தவித்து வருகின்றனர்.மேட்டூரில் தண்ணீர் இல்லாததால் கீழணையில் இருந்து வீராணத்திற்கு தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், வீராணத்தில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படும் பாசன வாய்க்கால்களில் போதிய தண்ணீர் இல்லாததால் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர்கள் கருக துவங்கியுள்ளது.

இதனால் வாய்க்கால் பாசன விவசாயிகள் பயிரைக் காக்க ஜெனரேட்டர் கொண்டு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.
சிதம்பரம் அடுத்த பு.முட்லூர் அருகே அரியகோஷ்டி வாய்க்காலில் இருந்து வயலுக்கு தண்ணீர் பாயாத நிலையில் ஜெனரேட்டர் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.
இதே நிலை பல இடங்களில் தொடர்ந்து வருவதால் விவசாயிகள் செய்வதறியாது திகைத்துள்ளனர்.மழை பெய்தால் மட்டுமே இந்த நிலை மாறும். இல்லையெனில் காவிரி டெல்டா விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தை அறுவடை செய்ய முடியாமல் பயிர்கள் முற்றிலும் காய்ந்து கருகும் சூழ்நிலை உருவாகும் என்பதில் ஐயமில்லை.குடிநீருக்கும் ஜெனரேட்டர் பெரும்பாலான கிராமங்களில் கிராமங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிக்கு பெரிய ஜெனரேட்டர் வைத்து இயக்கி அதன் மூலம் தண்ணீர் ஏற்றப்படுகிறது.

## உர மானிய நிலுவையை வழங்க கூடுதல் தொகை தேவை



புதுடில்லி: உர மானிய நிலுவையை வழங்க, கூடுதல் தொகை ஒதுக்குமாறு, மத்திய நிதியமைச்சகத்திடம் கோரியுள்ளதாக, மத்திய ரசாயனங்கள் மற்றும் உரத் துறை இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜெனா, பார்லிமென்டில் தெரிவித்தார்.அவர், மேலும் கூறியதாவது:நடப்பு, 2012 - 13ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், இறக்குமதி செய்யப்படும், பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கு மானியம் வழங்க, 12,576 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
இதில், ஏற்கெனவே, 12,477 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. உரத்திற்கான நிலுவையை வழங்க, கூடுதல் தொகையை கோரியுள்ளோம்.நிலுவையை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது, கூடுதல் நிதியை கொண்டு சரி செய்யப்படும்.அதே சமயம், இறக்குமதியாகும் யூரியாவிற்கான, மானியம் வழங்க போதுமான நிதி உள்ளது.நடப்பு நிதியாண்டில், யூரியாவிற்கு, 18,016 கோடி ரூபாய் மானியம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில், 12,189 கோடி ரூபாய் வழங்கப்பட்டு விட்டது. எஞ்சிய தொகை, நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் வழங்கப்படும். அனைத்து உர, யூரியா நிறுவனங்களும், அதிக செலவு பிடிக்கும்

நாப்தாவிற்கு பதிலாக, குறைந்த செலவினம் கொண்ட, இயற்கை எரிவாயுவை பயன்படுத்த வேண்டும் என்பது குறித்த கொள்கை திட்டத்தை, மத்திய அரசு உருவாக்கி வருகிறது.
யூரியா உற்பத்திக்கான மொத்த செலவில், 80 சதவீதம் எரிபொருளுக்காக செலவிடப்படுகிறது. எரிவாயு மூலம் ஒரு டன் யூரியா தயாரிக்க, 8,500 ரூபாய் செலவாகிறது. அதேசமயம், நாப்தா மூலம் ஒரு டன் யூரியா உற்பத்தி செய்ய, 28 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.நாட்டில், 28 உர நிறுவனங்கள் உள்ளன. இவற்றில், எட்டு நிறுவனங்கள் நாப்தாவை பயன்படுத்துகின்றன. நாட்டின் மொத்த யூரியா உற்பத்தி, 2.20 கோடி டன்னாக உள்ளது. இதில், ஐந்தில் ஒரு பங்கு, நாப்தா வாயிலாக உற்பத்தி செய்யப்படுகிறது.பெர்டிலைசர் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மற்றும் இந்துஸ்தான் பெர்டிலைசர் கார்ப்பரேஷன் நிறுவனங்களின், மூடப்பட்ட, எட்டு உரத் தொழிற்சாலைகளின் நிலம், இயந்திரங்கள் ஆகியவற்றின் மதிப்பு, 5,582 கோடி ரூபாய் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இந்த எட்டு தொழிற்சாலைகளின் புனரமைப்பிற்கு, கடந்த ஆண்டு மத்திய அரசு அனுமதி வழங்கியது. ஒவ்வொரு தொழிற்சாலையும், ஆண்டுக்கு குறைந்தபட்சம், 12.70 லட்சம் டன் யூரியாவை உற்பத்தி செய்யக்கூடிய, திறன் கொண்டவையாக அமைக்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
"பிரம்மபுத்ரா வேலி பெர்டிலைசர் கார்ப்பரேஷன்' நிறுவனத்தின், மூடப்பட்ட நாம்ரூப் தொழிற்சாலையின், முதல் பிரிவின் மதிப்பு, 20.75 கோடி ரூபாய் என, தீர்மானிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள காலி நிலத்தில், அம்மோனியா- யூரியா தொழிற்பிரிவை அமைப்பது குறித்து, பரிசீலிக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு, ஸ்ரீகாந்த் குமார் ஜெனா தெரிவித்தார்.

## வேளாண் கடன் இலக்கு எட்ட வாய்ப்பில்லை



மும்பை: நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, வலுச் சேர்க்கும் முக்கிய துறைகளுள், வேளாண் துறையும் ஒன்றாகும். நம்நாட்டில், 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள், விவசாயத்தை நம்பியே உள்ளனர். உணவு தானியங்கள் உற்பத்தியில், நம்நாடு தன்னிறைவு கண்டுள்ளது.இருப்பினும், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் போன்றவற்றின் உற்பத்தியில் பின் தங்கியுள்ளோம்.

விவசாயத்தை மேம்படுத்தும் வகையில், மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும், வங்கிகள் வழங்கும் மொத்த கடனில், 18 சதவீதம், வேளாண் துறைக்கு வழங்கப்படவேண்டும் என, இலக்கு நிர்ணயித்துள்ளன.ஆனால், பல்வேறு காரணங்களால், நடப்பு நிதியாண்டில், பல பொதுத் துறை வங்கிகளால், இந்த இலக்கை எட்ட முடியாது என, தெரியவந்துள்ளது.இந்நிலையில், பொதுத் துறை வங்கிகள் கூட்டத்தில், மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசுகையில், "முன்னுரிமை துறைகளுக்கான கடன் இலக்கை எட்டும் வகையில், வங்கிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும். குறிப்பாக, வேளாண் கடன் இலக்கு அளவான, 18 சதவீதம் எட்டப்பட வேண்டும்' என்று தெரிவித்தார்.
இதற்கு எடுத்துக்காட்டாக, சென்ற செப்டம்பர் மாதம் வரையிலுமாக, பொதுத் துறையை சேர்ந்த பேங்க் ஆப் பரோடா, வழங்கிய மொத்த கடனில், வேளாண் துறைக்கு, 15.43 சதவீத அளவிற்கு கடன் வழங்கியுள்ளது.

இதையடுத்து, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் சென்ட்ரல் பேங்க் ஆகியவை தலா 12 சதவீதமும், அலகாபாத் பேங்க், 11 சதவீதமும், யூனியன் பேங்க் ஆப் இந்தியா, 9.86 சதவீதமும், வேளாண் கடன் வழங்கியுள்ளன.நடப்பு நிதியாண்டில், வேளாண் கடன் இலக்கு எட்டுவது கடினம். மேலும், வேளாண் கடன் வழங்குவதில் புதிய வழிமுறைகள் கடைபிடிக்கப்பட்டால் மட்டுமே, அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் வேளாண் துறைக்கான கடன் இலக்கை எட்டுவது சாத்தியமாகும் என, பொதுத் துறை வங்கியைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுத் துறை வங்கிகளில், பஞ்சாப் நேஷனல் பேங்க் மற்றும் ஆந்திரா பேங்க்,வேளாண் துறைக்கு முறையே, 17.87 சதவீதம் மற்றும் 17.02 சதவீத அளவிற்கு கடன் வழங்கியுள்ளன. எனவே, நடப்பு நிதியாண்டில், இவ்விரு வங்கிகள் மட்டுமே வேளாண் கடன் இலக்கை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

26.11.2012 P.M

27.11.2012 A.M

## மேட்டூரில் இன்னும் 8 நாளைக்கே தண்ணீர்



தஞ்சை : மேட்டூர் அணையில் இன்னும் 8 நாளைக்கு மட்டுமே திறந்துவிடும் நிலையில் நீர் இருப்பு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

"சோழநாடு சோறுடைத்து" என்ற சிறப்புடன் விளங்கிய பழைய தஞ்சை மாவட்டம் கொஞ்சம் கொஞ்சமாக வறண்ட பூமியாக மாறி வருகிறது. காவிரியில் தமிழகத்திற்கு வரவேண்டிய நீரை கர்நாடகா அரசு தேக்கி, விரிவாக்கப்பட்ட விவசாய நிலப்பரப்பில் சாகுபடி மேற்கொள்வதுதான் இதற்கு காரணம் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

குறுவை சாகுபடிக்கு வழக்கமாக ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணை திறக்க வேண்டும். கடந்த 60 ஆண்டு கால வரலாற்றில் 15 ஆண்டுகள் மட்டுமே ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மிகவும் காலதாமதமாக செப்டம்பர் 17ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 84.42 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 12,776 கன அடி தண்ணீர் வந்தது. மிகவும் காலந்தாழ்த்தி அணை திறக்கப்பட்டதால் குறுவை பரப்பையும் சேர்த்து சுமார் 10 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய அரசு திட்டமிட்டது. ஆனால், இதுவரை சுமார் 7 லட்சம் ஏக்கர் அளவிலேயே சம்பா நடவும், நேரடி விதைப்பும் நடந்து முடிந்துள்ளது.

மீதமுள்ளவை நீரின்றி சாகுபடி செய்யப்படாமல் தரிசாக போடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 48 அடியாக குறைந்துவிட்டது. அணையின் நீர் இருப்பு 17 டிஎம்சியாகும். இதில் அதிகபட்சம் 7 டிஎம்சி நீரை மட்டுமே வெளியேற்ற முடியும். மீதமுள்ள 10 டிஎம்சி நீரை வெளியேற்ற முடியாது. இந்நிலையில் 7 டிஎம்சி என்பது தற்போது வெளியேற்றப்படும் நீரின் அளவுக்கு வெளியேற்றினால் இன்னும் 8 நாளைக்கு தான் சம்பா பயிர்களுக்கு மேட்டூரிலிருந்து தண்ணீர் கிடைக்கும். பருவமழையும் பெய்வதற்கான வாய்ப்பும் குறைந்துவிட்டது.

காவிரி டெல்டாவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிரை காப்பாற்ற உடனடியாக கர்நாடகா தண்ணீர் திறந்துவிடுவதை தவிர வேறு வழியில்லை. தற்போது காவிரி டெல்டாவில் சம்பா வயல்கள் நீரின்றி காய்ந்து, வெடித்து வருகின்றன. ஒரு சில இடங்களில் கருகி வருகின்றன. இன்னும் ஒரு சில நாட்கள் இதேநிலை நீடித்தால் சாகுபடி செய்யப்பட்ட அனைத்து பகுதிகளிலும் பயிர்கள் காய்ந்து கருக துவங்கிவிடும்.

ஏக்கருக்கு 25,000 இழப்பீடு

தமிழக விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட தலைவர் கக்கரை சுகுமாறன் கூறும்போது, Ôதற்போது சம்பா பயிர், நீரின்றி கருக துவங்கிவிட்டது. இனி இப்பயிர்கள் தண்ணீர் விட்டாலும் பிழைக்காது. எனவே மேலும் காலம் தாழ்த்தாமல் அரசு ஏக்கருக்கு 25,000 இழப்பீடு வழங்க வேண்டும். கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். நடப்பாண்டு நிலவரியை தள்ளுபடி செய்ய வேண்டும்" என்றார்.

## 70 லட்சம் டன் சர்க்கரை வெளிச்சந்தையில் விற்பனை



புதுடெல்லி : மத்திய உணவு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியதாவது: ஒவ்வொரு மாதமும் சர்க்கரை ஆலைகள் எவ்வளவு சர்க்கரையை வெளிச் சந்தையில் விற்கலாம் என்பதை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. இதன்படி, டிசம்பர் முதல் அடுத்த ஆண்டு மார்ச் வரையிலான காலத்தில், சர்க்கரை ஆலைகள் 70 லட்சம் டன் சர்க்கரையை வெளிச்சந்தையில் விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது மாதந்தோறும் வழங்கப்படும் சராசரி விற்பனை அளவைக் காட்டிலும் 17 லட்சம் டன் அதிகம். இவ்வாறு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

26th nov 2012 P.M

**போதிய மழை இல்லாததால் நெற்பயிர்கள் கருகும் அபாயம் விவசாயிகள் கவலை**

பரமக்குடி, : பரமக்குடி பகுதியில் போதிய மழை பெய்யாததால் நெற்பயிர்கள் கருகும் அபாய நிலையில் உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேரில் நெல் விவசாயமும். சிறு தானியங்கள் 5 ஆயிரம் ஹெக்டேரிலும், பயறு வகைகள் 4 ஆயிரம் ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துக்கள் 6 ஆயிரத்து 700 ஹெக்டேரி லும், பருத்தி 2 ஆயிரத்து 400 ஹெக்டேரிலும் நடக்கிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நெல் உற்பத்தியை அதிகப்படுத்தவும், குறைந்த செலவில் அதிக மகசூல் எடுக்கவும் வேளாண் துறை யினர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். குறிப்பாக, செம்மை நெல் சாகுபடி உள்ளிட்ட புதிய முறையில் சாகுபடி தொழில்நுட்பத்தை விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்தி வருகின்றனர். இருப்பினும், மாவட்டத்தில் பருவமழை சரிவர பெய்யாததால் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் வறட்சி பகுதி. விவசாயம் இனியும் மேற்கொள்ள முடி யாது என கருதி தங்களது நிலங்களை மனைகளாக மாற்றி வருகின்றனர். விவசாயத்தை நம்பியே உள்ள பலர், நெற்பயிர்களை தங்களது நிலங்களில் நடவு செய்தனர். பருவமழை இல்லாததால் விளைந்த நெற்பயிர்கள் கருகும் அபாய நிலைக்கு வந்துவிட்டன.

குறிப்பாக, பரமக்குடி, நயினார்கோவில், போக லூர் ஒன்றியங்களை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள நிலங்களில் நடவு செய்யப்பட்டிருந்தன. போதிய மழை பெய்யவில்லை. கிராமங்களில் விளைந்த நெற்பயிர்கள் அனைத்தும் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி ராஜபாண்டி கூறுகையில், ‘‘கடந்த வருடம் பெய்த தொடர்மழை பயிர்கள் அழுகி நாசமானது. இந்த வருடம் பருவமழை சரிவர பெய்யவில்லை. மழையை நம்பியே

இப்பகுதியில் விவசாயம் செய்யப்படுவதால் இந்த வருடம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காது,'' என்றார்.

## கோழி வளர்ப்பு தொழிலுக்கு கடன் வழங்க வங்கிகள் மறுப்பு பயனாளிகள் குற்றச்சாட்டு

கடையம் : கோழி வளர்ப்பு தொழிலுக்கு கடன் வழங்க வங்கிகள் மறுத்து வருவதாக பயனாளிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டு காலமாக கோழி வளர்ப்பு தொழில் நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. கோழி வளர்ப்பதற்கு ஏற்ற தட்பவெப்ப சூழ்நிலை உள்ளதாலும், நிரந்தர வருமானம் கிடைப்பதாலும் கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது.

இந்நிலையில் அரசு சார்பில் கோழி பண்ணை கள் அமைத்து தொழில் வளர்ச்சியை பெருக்க நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களை உள்ளடக்கிய சங்கரன்கோவிலை மையமாக வைத்து சங்கரன்கோவில் மண்டலம் உருவாக்கப்பட்டது. மேலும் கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு வங்கிகள் மூலம் ஒரு சதுர அடிக்கு 150 வீதம் 5000 சதுர அடி வரை பண்ணைகள் அமைக்க ரூ.7.50 லட்சம் வரை 50 சதவீத மானியத்துடன் கடன் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. முதற்கட்டமாக நெல்லை மாவட்டத்தில் 250 பேருக்கு கோழிப்பண்ணைகள் அமைக்க கடனு தவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனை மாவட்ட கால்நடைத்துறை இணை இயக்குநர் அலுவலகம் மூலம் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கோழி வளர்ப் பில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள் மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் ஒப்பந்த கடிதத்தோடு விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பின்னர் இதனை மாவட்ட கால்நடைத்துறை இணை இயக்குநர் அலுவலக அதிகாரிகள் பரிசீலித்து உரிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டது. விண்ணப்பதாரர்களை அவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட வங்கிகளுக்கு சென்று கடனுதவிக்கு தேவையான ஆவணங்களை அளித்து, ஆலோசனை பெற அறிவுறுத்தப்பட்டது. ஆனால் வங்கிகளுக்கு செல்லும் விண்ணப்பதாரர்களுக்கு தகுதி இருந்தும் வங்கி அதிகாரிகள் கடன் வழங்க மறுத்து வருகின்றனர்.

இதுகுறித்து கோழிப்பண்ணைகள் அமைக்க விண்ணப்பித்திருந்த மாதாபுரம் ஜேசுராஜன் கூறுகையில், கோழி வளர்ப்பில் எனக்கு நல்ல ஈடுபாடு உண்டு. நான் சொந்தமாக கோழிப்பண்ணை அமைப்பதற்கு கடனுதவி வேண்டி விண்ணப்பித்திருந்தேன். எனது விண்ணப்பம் குறிப்பிட்ட வங்கிக்கு அனுப்பப்பட்டதாக தகவல் தெரிவித்தவுடன் வங்கி

மேலாளரை அணுகி கேட்டபோது விண்ணப்பிக்கும் முன்பு எங்களிடம் ஏன் வங்கியை குறிப்பிட்டீர்கள். இப்போது கடன் வழங்கும் நிலையில் நாங்கள் இல்லை. உங்கள் விண்ணப்பங்களை திருப்பி அனுப்பி விடுவோம் என்றார்.

இவ்வாறு தகுதியுள்ள நபர்களுக்கு கடன் வழங்காமல் விண்ணப்பிக்கும் முன் தங்களை ஆலோசிக்கவில்லை என்ற காரணத்திற்காக ஈகோ மனப்பான்மையுடன் செயல்படும் வங்கி அதிகாரிகளின் செயல்பாடுகளை கவனித்து நடவடிக்கை எடுத்தால் தான் அரசு அறிவித்துள்ள திட்டம் வெற்றியடையும் என்பதில் ஐயமில்லை.

**வேளாண் அலுவலர் சங்கம் துவக்கம்**

சின்னமனூர், : சின்னமனூர் மறவர் மக்கள் மன்றத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம், தமிழ்நாடு வேளாண் தொழில்நுட்ப அலுவலர் சங்கம் சார்பில் தேனி மாவட்ட தமிழ்நாடு வேளாண் தொழில்நுட்ப அலுவலர் சங்கம் துவக்க விழா மற்றும் மாவட்ட நிர்வாகிகள் தேர்வு நடந்தது. மாநில தலைவர் அயூப்கான் தலைமை வகித்தார். முத்துராமலிங்கம் முன்னிலை வகித்தார். முருகானந்தம் வரவேற்றார். மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர். மாநில தலைவர் அயூப்கான் துவக்கி வைத்தார். மாவட்ட தலைவராக சிவக்குமார், மாவட்ட துணைத் தலைவராக பாலு, மாவட்ட செயலாளராக சரவணக்குமார், மாவட்ட இணை செயலாளராக கருப்பசாமி, மாவட்ட பொருளாளராக ஜெகதீஸ்பாண்டியன், மாவட்ட அமைப்பு செயலாளராக செல்வம், மாவட்ட தணிக்கையாளராக ஜெயபிரகாஷ் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு அதிக விலை உயர்த்தி ஊக்கப்படுத்தியதற்கு முதல்வர் ஜெய லலிதாவிற்கும், வேளாண் துறை அமைச்சருக்கும் தேனி மாவட்ட பொதுக்குழு நன்றி தெரிவிக்கிறது.

உதவி வேளாண்மை அலுவலர்களின் குறைந்த பட்ச கல்வித்தகுதி பிளஸ்2 என நிர்ணயம் செய்ய உள் ள முதல்வர், வேளாண்மை துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறது.

வேளாண்மை அலுவலர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியத்தை போல துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் சம ஊதியம் கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோட்டக்கலை துணை அலுவலர் மருதுபாண்டியன் நன்றி கூறினார்

**மழையின்றி விவசாயம் பாதிப்பு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்**

மூணாறு, : மழையின்றி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், வறட்சி நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

கேரள-தமிழக எல்லை பகுதியில் உள்ள தேவிகுளம் தொகுதிக்கு உட்பட்ட மறையூர், காந்தலூர் மற்றும் வட்டவடை ஊராட்சிகளில் தமிழர்கள் அதிகம் வசிக்கின்றனர். விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு, வெள்ளைப்பூண்டு மற்றும் பட்டானி, பீன்ஸ், முட் டைகோஸ், காரட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட காய்கறிகள் விவசாயம் நடக்கிறது.

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைகளை நம்பியே பெரும்பாலும் விவசாயிகள் விவசாய பணிகளை துவக்குகின்றனர். இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போன தால், இப்பகுதி விவசாயிகள், விவசாய பணிகளில் தீவிரம் காட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் தற்போது இப்பகுதியில் விவசாய பொருட்களின் உற்பத்தி பெருமளவில் பாதித்துள்ளது.  வி வசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். தங்களது அவல நிலையை போக்க, வறட்சி நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**டன்னுக்கு ரூ.3.500 வரை கொள்முதல் விலை உயராவிட்டால் கரும்பு பயிரிட மாட்டோம் விவசாயிகள் அதிரடி முடிவு**

விருதுநகர், : மின்சார தட்டுப்பாடு, உரவிலை உயர்வால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், கரும்பு கொள்முதல் விலை யை டன்னுக்கு ரூ.3.500 வரை உயர்த்த வேண்டும். இல்லையெனில் கரும்பு பயிரிடப்பட மாட்டோம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை போதிய அள வில் பெய்யாததால் தென் மாவட்டங்களில் நீர்நிலை கள் வறண்டு கிடக்கின்றன. விவசாயத்திற்கான மின்சா ரம் தினசரி 2 முதல் 4 மணி நேரம் மட்டுமே வழங்கப்படுகிற நிலையில், கிணறுக ளில் இருந்து நீரை இறைத்து பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில் விருதுநகர் மாவட்டத்தில் விவசாய பணிகள் கேள்விக்குறியாகி உள்ளன.

விருதுநகர் மாவட்டத் தில் கரும்பு விவசாயம் 4, 500 ஹெக்டேர் பரப்பில் நடை பெற்று வருகிறது. பொது வாக கரும்பு பயிருக்கு அதிகளவில் தண்ணீர் தே வைப்படும். வடகிழக்கு பருவ மழை சரிவர பெய்யாத தால் அணைகள், கண்மாய்களில் தண்ணீர் இல்லை.

விவசாயத்திற்கான மின்சாரமும் இல்லாத நிலை யில், கரும்பு விளைச்சல் குறைந்துள் ளது.

இந்நிலை யில் கரும்பிற் கான கொள் முதல் விலை யை டன்னுக்கு ரூ.3,500 என அரசு உயர்த்தி வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ராமச்சந்திரராஜா கூறுகை யில், `கரும்பிற்கான கொள் முதல் விலையாக டன்னு க்கு ரூ.2,500 வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்பட்டது. ஆனால், அரசு முத்தரப்பு கூட்டம் நடத்தாமல், கரும்பு விவசாயிகளை பாதிக்கும் வகை யில் டன்னுக்கு ரூ.2,350 வழங்க ப்படும் என அறிவித்துள் ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் டன்னுக்கு ரூ.3,500 வரை வழங்கப்படுகிறது.

உரம் விலைஉயர்வு, அபரிமிதமான கூலி உயர்வு, மின்தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களால் கரும்பு உற்பத்தி குறைந்துள்ளது. உற்பத்தி செலவு டன்னுக்கு ரூ.3,200 வரை உயர்ந்துள் ளது. எனவே, அரசு அறிவி த்துள்ள கொள்முதல் விலை விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும். விருதுநகர் மாவட்டத்தில் கரும்பு பயிரிடப்படப்போவதில்லை என விவசாயிகள் தீர்மானித்துள்ளனர் என்றார்.

**விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சி**

பழநி, : பழநியில் அட்மா திட்டத்தின் கீழ் விதை விற்பனையாளர்களுக்கு சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டது. பழநி கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் முருகேசன் தலைமை வகித்தார். பழநி விதை ஆய்வாளர் காசிராஜன் வரவேற்றுப் பேசினார். பயிற்சியில், தரமான விதைகள் வழங்குதல், விதை சட்டத்தின் பங்கு, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விதைகள் வழங்குதல், மகசூல் உயர்வு, விதையின் தரம், விதைப்பண்ணை மூலம் தரமான விதைகள் உற்பத்தி செய்தல், சான்று விதைகள் உற்பத்தி, விதை உரிமம், பதிவேடு பராமரித்தல், விதை சட்ட அமலாக்கம், விதை கொள்முதல், விதை பராமரிப்பு குறித்து எடுத்துரைக்கப்பட்டது. பழநி வேளாண் உதவி இயக்குநர் வெள்ளைச்சாமி, வேளாண் அலுவலர் காளிமுத்து, விதை ஆய்வாளர் சேட் முகமது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பழநி தனி அலுவலர் லோகநாதன் நன்றி கூறினார்.

**கறிக்கோழி விலை சரிவு ஒரு கிலோ கறி வாங்கினால் 3 முட்டை , கறிமசால் இலவசம்**

திண்டுக்கல். : கார்த்தி கை மாதம் எதிரொலியாக திண்டுக்கல்லில் கறிக்கோழி விலை சரிந்துள்ளது. ஒரு கிலோ கறி வாங்கினால் 3 முட்டை, கறிமசால் பாக் கெட் இலவசமாக வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் நகரில் 500க்கும் மேற்பட்ட கறிக் கோழி கடைகள் உள்ளன. இந்த கடைகளுக்கு பொ

ள் ளாச்சி, உடுமலைபேட் டை போன்ற வெளிமாவட்டம் மற்றும் திண்டுக்கல் புறநகர் பகுதிகளில் உள்ள பண்ணைகளில் இருந்தும் கோழி கள் வருகின்றன. ஞாயிறு மற்றும் புதன்கிழமையை தவிர மற்ற நாட்களில் சராசரியாக தினமும் சுமார் 30 ஆயிரம் கிலோவும், ஞாயிறு, புதன்கிழமைகளில் ஒரு லட்சம் கிலோவும் கறி விற்பனையாகிறது.

கடந்த மாதம் உயிருடன் ஒரு கிலோ கோழி ரூ.90க் கும், கறி ரூ.140க்கும் விற்பனையானது. தற்போது கார்த்திகை மாதம் பிறந்துள்ளதால் ஏராளமானோர் சபரிமலை, பழநி முருகன் கோயிலுக்கு மாலை அணி ந்து வருகின்றனர். இதனால் ஆடு, மீன், கோழி கடை களில் விற்பனை மந்தம் அடைந்துள்ளது. வாடிக்கையாளர்களை கவர வியாபாரிகள் விலையை குறைத்துள்ளனர். ரூ.140க்கு விற்கப்பட்ட கறி தற்போது ரூ.70க்கு விற்பனையாகிறது. ஒருசில கடைகளில் ஒரு கிலோ கறி வாங்கினால் 3 முட்டை மற்றும் 100 கிராம் எடை கொண்ட கறிமசால் பாக்கெட் இலவசமாகவும், இன்னும் சில இடங்களில் 2 கிலோ கறி வாங்கினால் கால்கிலோ கறி இலவசமாகவும் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து நாகல்நகரை சேர்ந்த கறிக்கோழி வியாபாரி பழனிச்சாமி கூறுகையில், கார்த்திகை மாதத்தில் பக்தர்கள் சபரிமலைக்கும், பழநி முருகனுக்கும் மாலை அணிந்து விரதத்தை துவக்கியுள்ளனர். இதனால் பல இடங்களில் வியாபாரம் மந்தம் அடைந்துள்ளது. தொழில் போட்டி காரணமாக விலையை குறைத்ததோடு சில இடங்களில் இலவசமாக முட்டை, கறிமசால் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டு வருகிறது. ஐயப்ப சீசன்முடியும் வரை இந்த விலை குறைப்பு தொடரும் என்றார்.

## விலையுமில்லை … விளைச்சலுமில்லை … கொடைக்கானல் கேரட் விவசாயிகள் கவலை

கொடைக்கானல், : சீதோஷ்ணநிலை காரண மாக கொடைக்கானலில் கேரட் விளைச்சல் பாதிக்க ப்பட்டுள்ளது. உரிய விலை கிடைக்காததாலும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கொடைக்கானல் அரு கே வில்பட்டி, பள்ளங்கி, கோயில்பட்டி, பாலக்காட்டுஓடை, மாட்டுப்பட்டி, அட்டுவம்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் கேரட் சாகுபடி செய்யப்பட்டுள் ளது.

இங்கு விளையும் கேரட் மதுரைக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படும். இந்த ஆண்டு சீதோஷ்ணநிலை காரண மாக கேரட் விளைச்சல் பாதியாகக் குறைந்தது. ஒரு ஏக்கரில் 20 ஆயிரம் கிலோ கேரட் மகசூல் கிடைக்கும். 50 கிலோ எடை கொண்ட சிப்பம் 200 சிப்பம்

கிடைக்கும். இதுதான் நல்ல விளைச்சல்.

ஆனால் இந்த ஆண்டு மகசூல் பகுதியாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே நேரத்தில் விலை ரூ.25 முதல் ரூ.30 வரை விலை கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு ரூ.10 முதல் ரூ.15 வரையே கிடைக்கிறது.

இதன் காரணமாக கேரட் பயிரிட்ட விவசாயி கள் போதுமான விலையும் கிடைக்காமல், விளைச்ச லும் இன்றி பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

## வரத்து குறைவால் பூ விலை கிடுகிடு கிலோ ரூ.1200க்கு விற்பனை

திண்டுக்கல், : மல்லிகை பூ வரத்து குறைவு காரணமாக நேற்று ஒரு கிலோ ரூ.1200க்கு விற்பனை செய்யப்பட்டது.

திண்டுக்கல் நகரை சுற்றியுள்ள தாடிக்கொம்பு, ஏ.வெள்ளோடு, எரியோடு, புகை யிலைபட்டி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 600 ஏக்கரில் மல்லி, முல்லை, கனகாம்பரம் உள்ளிட்ட பல வகை பூக்கள் சாகுபடி செய்யப்படுகின் றன. இப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு ள்ள பூக்கள் திண்டுக்கல் பூ மார்க்கெட்டி ற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

மேலும் மதுரை, திருச்சி, சென்னை, கோவை போன்ற வெளிமாவட்டத்திற்கும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற வெளிமாநிலத்திற்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. ஒரு நாளைக்கு சராசரியாக 10 டன் முதல் 15 டன் வரை பூக்களின் வரத்து இருக்கும். கடும் பனிப்பொழிவு காரணமாக தற்போது மல்லிகை வரத்து குறைந்துள்ளது.

ஒரு நாளைக்கு சுமார் 3 டன் வரை மல்லிகை வரத்து இருக்கும். ஆனால் நேற்று 250 கிலோ மட்டுமே மல்லிகை வரத்து இருந்தது. இதனால் விலை பல மடங்கு உயர்ந்து காணப்பட்டது. அதேபோல் மற்ற பூக்களின் விலையும் சற்று உயர்ந்து இருந்தது.

இதுகுறித்து திண்டுக்கல் பூ மார்க் கெட் வியாபாரி முத்துக்கிருஷ்ணன் கூறுகையில், பனிப்பொழிவு காரணமாக பூக்கள் உதிர்ந்துவிட்டன. வரத்து குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு இன்னும் சில நாட்கள் நீடிக்கும் என்றார்.

திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் (கிலோவில்):

மல்லிகை ரூ.1200, கனகாம்பரம் ரூ.1000, சம்மங்கி ரூ.120, கோழிக்கொண்டை ரூ.40, செண்டுமல்லி ரூ.40, காக்கரட்டான் ரூ.200, அரளி ரூ.100, ரோஜா ரூ.50, வாடாமல்லி ரூ.50 என விற்பனை செய்யப்பட்டது.

**நோய்களில் இருந்து நெற்பயிரை காப்பாற்ற வேளாண்துறை உதவி ?இயக்குநர் யோசனை**

காரைக்குடி, : நெற்பயிரில் ஏற்படும் இலை சுருட்டுப்புழு, இலைகருகல் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்க வேளாண் துறை உதவி இயக்குநர் மணிவண்ணன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

காரைக்குடி அருகே சாக் கோட்டை ஒன்றியத்துக்குட்பட்ட மணியாரம்பட்டி, பெத்தானேந்தல், பெரியகோட்டை, பெத்தாச்சிகுடியிருப்பு, கருநாவல்குடி, பானான்வயல் உட்பட பல்வேறு பகுதிகளில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

இப்பயிரிகளில் இலை சுருட்டுப்புழு, பாக்டீரியல் இலைக்கருகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. குறிப்பாக ஜே.சி.எல். ரகத்தில் இந்நோய் தாக்குதல் நோய் அதிகமாக காணப்படுகிறது.

பயிர்களுக்கு உரம் இடுவதை தவிர்க்க வேண்டும். தண்ணீரை வடிக்க வேண்டும். ஒரு எக்டேருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் டெட்ராசைக்கிளின் கலந்த மருந்து 300 கிராம் உடன் காப்பர் ஆக்ஸி குளோரைடு 1.250 கிராம் கலந்து தெளிக்க வேண்டும். இலை சுருட்டுபுழுவை கட்டுப்படுத்த ஒரு எக்டேருக்கு பேம் 70மிலி, ஆவான்க் 200 மிலி, ஹேசோதயான், புரபனோபாஸ் 100 மிலி கலந்து மருந்து தெளிக்க வேண்டும்.

மாலை வேலையில் சொக்கப்பான் கொழித்தி அல்லது விளக்கு பொறி அமைத்து தாய் அந்துபூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். தற்போது உள்ள நிலையில் அரக்கு நிறத்தில் கண்வடிவத்தில் உள்ள புள்ளிகளுடன் குலைநோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இதனால் தழைச்சத்தை இடு வதை தவிர்க்க வேண்டும். மேலும் முன்எச்சரிக்கையாக ஒரு எக்டேருக்கு சூடாமோனாஸ் ஆயிரம் கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்

இன்றைய வேளாண் செய்திகள்

27.11.2012 A.M

**டிசம்பர் -மார்ச் மாத காலத்தில் 70 லட்சம் டன் சர்க்கரை வெளிச்சந்தையில் விற்பனை**

எதிர் வரும் டிசம்பர் மாதம் முதல் மார்ச் வரையிலான 4 மாதங்களில் 70 லட்சம் டன் சர்க்கரையை வெளிச்சந்தைகளில் விற்பனை செய்ய சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆலைகள், மொத்த உற்பத்தியில் 10 சதவீதத்தை, அரசின் பொது விநியோக திட்டங்களுக்காக குறைந்த விலையில் விற்பனை செய்கின்றன. எஞ்சியவை வெளிச்சந்தை விற்பனை மற்றும் அனுமதி பெற்ற ஏற்றுமதிக்கு பயன்படுத்தப்படுகின்றன. கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் 40 லட்சம் டன் சர்க்கரை வெளிச்சந்தை விற்பனைக்காக அனுமதிக்கப் பட்டிருந்தது. இதில், விற்பனையாகாமல் மீதமுள்ள 2 லட்சம் டன் சர்க்கரையையும் சேர்த்து, அடுத்து வரும் மார்ச் மாதம் வரையிலான கால கட்டத்தில், 70 லட்சம் டன் சர்க்கரை வெளிச்சந்தைகளில் விற்பனை செய்யப்படும் என தெரிகிறது.

**வேளாண் உற்பத்தி உயர்ந்துள்ள நிலையிலும் தேவைப்பாட்டை ஈடுகட்ட முடியவில்லை மத்திய அமைச்சர் தாரிக் அன்வர் தகவல்**

உற்பத்தி திருப்திகரமாக உள்ள நிலையிலும் அதிகரித்து வரும் மக்கள் தொகை குறைந்து வரும் இயற்கை வளங்கள், பருவநிலை மாற்றங்கள், போதிய தொழில் நுட்ப வசதி இல்லாமை போன்ற காரணங்களால் இந்திய வேளாண் துறை பிரச்சனைகளை எதிர் கொண்டு வருவதாக மத்திய உணவு துறை ராஜாங்க அமைச்சரான தாரிக் அன்வர் தெரிவித்துள்ளார். 1951-52 ஆம் ஆண்டில் 5.20 கோடி டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி கடந்த 2011-12-ல் 25.74 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இருப்பினும், தனி நபர் பயன்பாடு எதிர்பார்க்கும் அளவினை காட்டிலும் குறைவாக இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

**தனிநபர் நில பயன்பாடு**

சர்வதேச வேளாண் கூட்டமைப்பு மாநாட்டில் பேசிய அமைச்சர், விவசாயம் அல்லாத நோக்கங்களுக்காக நிலங்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார். 1951-52-ல் 0.91 ஹெக்டேர் என்ற அளவில் இருந்த தனி நபர் நில பயன்பாடு 2011-12-ல் 0.32

ஹெக்டேராக குறைந்து போனது. இது வரும் 2050 ஆம் ஆண்டில் 0.09 ஹெக்டேராக குறையும் என மதிப்பிடுகள் தெரிவிக்கின்றன. பருவ நிலை மாற்றங்களால் தானியங்கள், பால் உற்பத்தி மற்றும் மீன் பிடி தொழில்கள் நலிவடைந்து வருவதாக தெரிய வந்துள்ளது. எனவே, இதனை கையாள தேவையான எதிர் நடவடிக்கைகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்வது அவசியம் என கூறப்படுகிறது.